# இஸ்லாமிய சமூகமைப்பும்

# இலங்கை முஸ்லிம்களும்




மூர்ஸி பாத்ஷா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய சமூகமைப்பும் இலங்கை முஸ்லிம்களும்

★

- முர்ஸி பாத்ஷா -

★

வாலிபர் வெளியீடு
12/7, மரிக்கார் பிளேஸ்,
மருதானை,
பேருவளை.

விலை : ரூ. 3-25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபர் வெளியீடு – 1.
முதற் பதிப்பு : 1395, ஜமாதுல் அவ்வல் பிறை 29.
10, ஜூன், 1975.

# இஸ்லாமிய சமூகமைப்பும் இலங்கை முஸ்லிம்களும்

விலை : ரூபா 3-25

ஆசிரியர் : முர்ஸி பாத்ஷா
விலாசம் : 12/7, மரிக்கார் பிளேஸ், மருதானை, பேருவளை,
இலங்கை.

அச்சிட்டோர் : குமரன் அச்சகம்,
201, டாம் வீதி, கொழும்பு-12 தொலைபேசி : 21388

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

---

VALIFAR VELIYEEDU – 1.
First Edition : 10 – 6 - 1975.

# ISLAMIYA SHAMOOKAMAIPPUM ELANKAI MUSLIMKALUM

Price : Rs. 3-25

Author : **MURSI BAATSHA**
Address : **12/7, Marikkar Place,**
**Maradana, Beruwala,**
**Sri Lanka.**

Printed at : The Kumaran Press,
201, Dam Street, Colombo-12.
Phone : 21388

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே......


| | | |
|---|---|---|
| 1. | என்னுரை ... ... ... ... | viii |
| 2. | இரு வழிகாட்டிகள் .... ... ... | 1 |
| 3. | இரு கடமைகள் .... .... .... ... | 3 |
| 4. | இரு கண்கள் .... ... ... .... | 4 |
| 5. | சகோதரத்துவம் .... .... ... .... | 9 |
| 6. | உழைப்பு ... ... .... .... .... | 15 |
| 7. | செல்வம் ... ... ... ... ... | 19 |
| 8. | வியாபாரம்.... ... ... ... .... | 25 |
| 9. | புகழ் ... ... ... ... .... | 28 |
| 10. | சீதனம் ... ... ... .... ... | 31 |
| 11. | கருத்தடை .... ... ... ... .... | 36 |
| 12. | மக்கள் தலைவர் .... ... ... ... | 41 |
| 13. | யுத்தம் ... ... ... ... ... | 46 |
| 14. | சமத்துவம்: வரலாற்றில் சில நிகழ்ச்சிகள்.... | 52 |
| 15. | விஞ்ஞானம்: சில தகவல்கள் ... ... | 59 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை :

'அல்ஹம்து லில்லாஹ்'. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இஸ்லாம் என்பது ஒருசில மந்திரங்களையும், பழக்க வழக்கங்களையும், விலக்கல்களையும், ஆத்மீகப் போதனைகளையும் மாத்திரம் கொண்டதல்ல. அஃது பூரணமான சீரிய வாழ்க்கைத் திட்டம்! அது, நீதி, நேர்மை, சத்தியம் என்பவற்றின்மீது தாபிக்கப்பட்டது. அநீதியை அக்கிரமத்தை, தீயவொழுக்கங்களைத் தகர்க்கிறது இஸ்லாம்.

மது, சூது, விபசாரம், கொலை, கொள்ளை, களவு, வட்டி, வஞ்சித்தல், சுரண்டல் போன்றவற்றைக் கண்டிப்பாகத் தடைசெய்கிறது. சுயநலமிகளுக்கு, துறவிகளுக்கு, சுரண்டுவோருக்கு, பணத்தால் எதையும் சாதித்துவிடலாம் என்று துணியும் தனவந்தர்களுக்கு, மதத்தின் பெயரால் வயிறு வளர்க்கும் கும்பலுக்கு, இவ்வுலக இன்பத்தில் – போலி கௌரவத்தில் மயங்கிய முதலாளித்துவ சிந்தனைகளைக் கொண்டவர்களுக்கு இஸ்லாத்தில் இடமில்லை.

**இஸ்லாம் இடாம்பீக உல்லாசவாழ்வைக் கண்டித்து, எளிய வாழ்வை வற்புறுத்துகிறது. ஆத்மீகமும் பொருளாதாரம் (உடல் வளர்ச்சியோடு ஆத்மீக வளர்ச்சியும்) இருகண்கள் போன்றவை என்கிறது.** அன்பு, இரக்கம், பாசம், சகோதரத்துவம், ஏகத்துவம், நல்லொழுக்கம் போன்றவற்றின் பிறப்பிடம் அது. சமூகம் இயங்க பொருள் ஒரே இடத்தில் குவியாதிருக்கும் பொருட்டு ஸக்காத் என்ற கட்டாயக் கடமையை முதன் முதல் வகுத்தளித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம். ஐம்பூதங்களான நீர், நெருப்பு, நிலம், காற்று, விண் என்பவை பொதுவானவை என்றும், அல்லாஹ் ஒருவனைத் தவிர, இவற்றிற்கு யாரும் உரிமை பாராட்ட முடியாது என்றும் முழக்க மிட்டு நிற்பது அது.

இலஞ்சம், ஊழல், சலுகை, செல்வாக்கு போன்றவற்றிற்கு இஸ்லாத்தில் இடமில்லை. சமூக அங்கத்தவர் அனைவருக்கும் சிறந்த பாதுகாப்பையும், சாந்தியையும் சமாதானத்தையும் வழக்குவது அது, சொல்லோடு செயலையும் பிரசாரத்தோடு நடவடிக்கையையும் வற்புறுத்துவது இஸ்லாம் இத்தகைய அம்சங்களைக் கொண்டதுதான் இஸ்லாமிய சமூகமைப்பு.

உலகிற்கு இறைவனால் அனுப்பப்பட்ட இறுதித் தூதரும், உலகில் முதன் முதல் சமத்துவப் போதனைகளை மேற் கொண்டவரும் எம்பெருமானார் முகம்மது நபீ (ஸல்) அவர்கள்தான் என்பதுவும், இவருக்குப் பின் தான் ஏனைய சமதர்மவாதச் சிந்தனையாளர்கள் தோன்றினார்கள் என்பதுவும் வரலாறு கூறும் உண்மை.

எமது ஸ்ரீலங்கா நாட்டில் இஸ்லாம் என்றால் என்ன? பொருளாதாரம், அரசியல், சமூகமைப்பு பற்றி இஸ்லாம் கூறுவது என்ன? என்பவை பற்றிச் சரியாக விளக்கப்படவில்லை. இக்குறை நீங்க, பிற மொழிகளிலுள்ள இஸ்லாமிய நூல்கள் (அல்குர்ஆன் - அல்ஹதீஸ்) உட்பட எமது தேசிய மொழிகளான சிங்களம், தமிழ் மொழிகளில் பெயர்க்கப்படல் வேண்டும். இம்முயற்சியின் அவசியத்தை எமதுமார்க்க அறிஞர்களும், பிரசாரகர்களும் கல்விமான்களும் உணரவேண்டும். காலத்திற்கு ஏற்ற நூல்கள் உருவாக்கப்படாவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிலை பரிதாபத்திற்குரிய ஒன்றாகிவிடும். மாறும் உலகின் - சமுதாயத்தின் போக்கை அவதானித்து நாமும் மாற வேண்டும். இது தவிர்க்க முடியாதது! நியதியும் அது தான்.

இஸ்லாமிய சமூகமைப்பு என்பது பரந்த ஒரு விடயம். அது பற்றி சிறப்பாக இங்கு ஆராயாப்படாவிட்டாலும் விசேஷமாக 'இலங்கை முஸ்லிம்களின் இன்றைய நிலையைக் கருத்தில் கொண்டு சமத்துவக் கண்ணோட்டத்தில் இச்சிறு நூல் என் சிற்றறிவுக்கு எட்டிய விதத்தில் எழுதப்படுகிறது. 'சமத்துவம் என்னும் போது தன வந்தரின் பொருளின் மீது ஏற்படும் பொறாமைத் தீயிலிருந்துதான் அது பிறந்தது - பிறக்கிறது என்று சிலர் கூளறுவது அர்த்தமற்றதும், அறிவீனமானதும், அறிவுக்குப் பொருந்தாதுமாகும். ஏழை வடிக்கும் கண்ணீர்த் துளிகளிலிருந்து - அன்பு இரக்கம் என்ற உணர்ச்சிகளிலிருந்து - மனிதாபிமானத்திலிருந்து - உண்மையான சகோதரத்துவத்திலிருந்துதான் சமத்துவம் மலர்ந்தது - மலர்கிறது என்பதை இங்கு அவர்களுக்குக் கூறிவைக்கவிரும்புகிறேன்.

இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் பற்றியும், ஆத்மீகம் பற்றியும் ஏற்கனவே பல நூல்கள் வெளிவந்துவிட்டன. இன்னும் வெளிவருகின்றன. ஆனால் இஸ்லாத்தில் பொருளாதரம், அரசியல், சமூகமைப்பு பற்றிய நூல்கள் இலங்கையில் வெளிவராமலிருப்பது எமது துர்பாக்கியமே. இது பற்றி எமது பிரசாரகர்களும், எழுத்தாளர்களும், மார்க்க அறிஞர்களும் அக்கறை காட்ட வேண்டும்.

இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் பற்றி இங்கு பிரமாதமாகப் பெருமைப்படாது விசேஷமாக 'இலங்கை முஸ்லிம்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எதிர் நோக்கும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும்? என்ற கருத்துணர்வை வாசகர்களிடம் ஏற்படுத்தி செயல்படத் தூண்டுவதே இச்சிறு நூலின் நோக்கமாகும்.

இன்று, விசேஷமாக இலங்கை முஸ்லிம்களை எதிர் நோக்கும் சீதனப் பிரச்சினை, தொழிலற்றோர் பிரச்சினை, பிச்சைக்காரர் பிரச்சினை, அங்கவீனர் பிரச்சினை, காணி நிலம் வீடு அற்றோர் பிரச்சினை போன்ற பிரச்சினைகளைத் தொடர்ந்தும் அனுமதிப்பது உண்மையான இஸ்லாமிய சகோதரத்துவத்திற்கு ஒரு பேரிழுக்காகும். எல்லாரும் எல்லாம் பெற்று சிறப்பாக வாழ வேண்டும், என்ற பரந்த எண்ணம் எமது நெஞ்சங்களில் முளைவிடாதவிடத்து, நாம் உண்மையான இஸ்லாமிய சகோதரத்துவ உணர்ச்சியுடைய உண்மையான முஸ்லிம்களாக முடியாது.

எமது சில மார்க்க அறிஞர்களின் போக்கு விசித்திரமாகவுள்ளது. வாழ்வின் அடிப்படையான பொருளாதாரம் பற்றி இவர்கள் பிரசங்கம் செய்வதுமில்லை, எழுதுவதுமில்லை. நிலவும் சமூக அமைப்பில், தமது வயிற்றுப் பிழைப்புக்காக தனவந்தர்களுக்குக் காவடி தூக்க வேண்டியிருக்கும் அவர்களின் பரிதாப நிலைதான் இதற்குக் காரணம். இந்த அவலநிலை மாறவேண்டும். இவர்கள் பணத்திற்குப் பயப்படாமல் அல்லாஹ்வுக்கு மாத்திரம் பயந்து உண்மையான இஸ்லாமியப் பணியைத் துணிந்து மேற்கொள்ளவேண்டும்.

இன்று இலங்கையில் ஏறக்குறைய பதினொரு இலட்சம் முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். ஒரே இடத்தில் வாழாமல் ஸ்ரீலங்காவின் பல பாகங்களிலும் பரந்து வாழ்பவர்கள். முஸ்லிம்கள் இலங்கையின் சிறுபான்மை மக்களாக இருப்பதனால் அவர்களால் தனித்து வாழ்ந்துவிட முடியாது. பிற சமூகங்களான சிங்கள, தமிழ் மக்களுடன் சேர்ந்து-கலந்து வாழ்பவர்கள்; இனியும் வாழ வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள். 'நாடு வாழ்ந்தால்தான் நாம் வாழ முடியும்' என்ற உண்மையை உணர்ந்தவர்களாக தேசிய ஒருமைப்பாட்டிற்காக நாட்டின் ஆக்கத்திற்காக உழைக்கும் மக்களாக நாம் மாறவேண்டும்-வாழவேண்டும்.

இன்று கட்சி அரசியல், 'தரீக்கா' என்ற இரண்டும் இலங்கை முஸ்லிம்களைக் கூறுபோடும் இரு சக்திகளாக மாறியிருக்கின்றன. சுயநலமிக்க பிற்போக்கு அரசியல்வாதிகளினதும், சில மார்க்க அறிஞர்களினதும் சுயநலப்போக்கிற்கு ஆயுதமாகப் பயன்படாமல் இலங்கை முஸ்லிம்கள் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.

இந்நூலின் குறைநிறைகளை வாசகர் பெருமக்கள் சுட்டிக் காட்டினால் பெரிதும் நன்றியுணர்ச்சியுடன் வரவேற்பேன். இஃது என் கன்னி முயற்சியானதால் என்னையறியாமல் விடப்பட்ட பிழைகளிருப்பின் பெரியோர் பெருமனதுடன் மன்னிப்பார்களென எதிர்பார்க்கிறேன்.

இச்சிறு நூலை எழுதுவதற்கு ஊக்கமளித்த ஆசிரியத் தோழர்களான H M நாஸிர், A. C. M. A. றஹ்மான், M. M. நிஸாம், Y. L M ரூஸிக், A. H M. நிஸாம் ஆகியோருக்கும் நண்பர் A. S. M. பாயிஸ் அவர்களுக்கும் அச்சிடப் பொருளுதவி வழங்கிய அன்புத் தம்பி அதாவுல்லாஹ் அவர்களுக்கும், அட்டைப் படத்தைக் கவர்ச்சியாக அமைத்துத் தந்த நண்பர் சந்ரா அவர்களுக்கும் அழகாக அச்சிட்டுத்தர முன்வந்த 'குமரன் அச்சக' அதிபர் திரு. செ. கணேசலிங்கன் அவர்களுக்கும், அச்சுப்படி பார்ப்பதில் உதவிய நண்பர் ஜனாப் S. I. நாகூர்கனி அவர்களுக்கும், மற்றும் உதவி ஒத்தாசை வழங்கிய தோழர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

இச் சிறு நூலைப் பொதுவாகத் தமிழ் உலகும், சிறப்பாக முஸ்லிம் உலகும் வரவேற்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

12/7, மரிக்கார் பிளேஸ், ஆசிரியர்
மருதானை,
பேருவளை. 28-4-75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு வழிகாட்டிகள்:

"இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா ?" (4 : 82)

* * *

உலகப் பொதுமறையான அல்குர்ஆன் ஈருலகங்களிலும் மனிதனின் ஈடேற்றத்திற்கு வழிகாட்டும் விலை மதிப்பற்ற ஓர் அரும் பொக்கிஷம்; காலத்தால் அழியாத - அழிக்கமுடியாத ஓர் அரும் களஞ்சியம்! காலத்திற்கேற்ற கருவூலம்! காலத்தை வென்று நிற்கும் இணையற்ற ஒரே ஏடு!

"இந்தக் குர்ஆனை அவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டாமா?" (4:82) என்று இறைவன் கேட்கிறான். அதில் உள்ளவற்றை ஓதுகிறோம். ஆனால், அதைக் கவனிக்கவோ, அதில் உள்ளவற்றைச் சிந்திக்கவோ, செயல்படுத்தவோ இல்லை.

திருக்குர்ஆனைப் படித்துணரக் கூடியவன் அதில், மனிதனுக்கு வேண்டிய அத்தனை ஞானங்களும், போதனைகளும், சட்டங்களும், நீதிமுறைகளும், படிப்பினைகளும் அடங்கியிருப்பதை நிச்சயமாக அறிந்துகொள்வான்.

"உங்களுக்கிடையில் நான் இரண்டினை விட்டுச்செல்கிறேன். அவ்விரண்டினையும் நீங்கள் உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளின் ஒருபோதும் நீங்கள் வழிகெட்டுப் போகமாட்டீர்கள். அவ்விரண்டும் அல்குர்ஆனும், அல்ஹதீஸுமாகும்" என்று இறுதித் தூதர் முகம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் தமது இறுதிக் காலத்தில் கூறிச் சென்றார்கள். அல்குர்ஆனும், அல்ஹதீஸும் மனிதனுக்குச் சரியான வழியைக் காட்டக்கூடிய இரு வழிகாட்டிகளாகும். சிறந்த ஒரு வாழ்க்கை முறைக்கு அவை வழிகாட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும்சரி, சமூக வாழ்விலும்சரி எழும் சகலவிதமான பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் அல்குர்ஆனும் அல்ஹதீஸும் அருமருந்து கொண்டிருக்கின்றன. மனிதனின் ஆத்மீக, சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகள் எதுவானாலும் அல்குர்ஆனும் அல்ஹதீஸும் விட்டுவைக்கவில்லை. மனிதன் இறந்ததன்பின் காணப்போகும் மறுவுலகவாழ்க்கைக்கும், பிறந்தபின் கண்டு கொண்ட இவ்வுலக வாழ்க்கைக்கும் வழிகாட்ட, மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தியான சர்வசக்தன் அல்லாஹ்வினால் அருளப்பட்ட புனித மார்க்கமானதால் அல்குர்ஆனிலும், அல்ஹதீஸிலும் நிச்சயமாக மனிதனின் சமூக அமைப்புக்குரிய போதனைகள் தாராளமாக இருக்கவே இருக்கின்றன.

---

★ ★ ★

''(நபியே!) நீர் கூறும்: ஒவ்வொரு மனிதனும் (நன்மை எனத்) தனக்குத் தோன்றியவைகளையே செய்கிறான். ஆகவே நேரான வழியில் செல்பவன் யார் என்பதையும் உங்கள் இறைவன்தான் நன்கறிவான்'' (17 : 84).

''வானங்கள், பூமியின் படைப்பிலும், இரவு பகலின் மாற்றத்திலும் அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன'' (3 : 190).

''(மனிதர்களே!) வானங்களிலும் பூமியிலும் உள்ளவைகளை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கிறான் என்பதையும், அவன் தன் அருட்கொடைகளை மறைவாகவும், வெளிப்படையாகவும் உங்கள்மீது சொரிந்திருக்கிறான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?''
(31 : 20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கடமைகள் :

இஸ்லாம், மனிதனுக்கு இரு கடமைகள் உண்டு என்று வற்புறுத்துகின்றது. ஒன்று ''ஹுகூகுல்லாஹ்''. அதாவது அல்லாஹ்வுக்கு ஒரு மனிதன் ஆற்றவேண்டிய பணி. அடுத்தது, ''ஹுகூகுல் இபாத்''. அதாவது ஒரு மனிதன் மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய பணி. முதலாவதை இறை வணக்கம் என்றும் இரண்டாவதை மக்கள் சேவை என்றும் கொள்ளலாம்.

யாரும் தனக்காக — தமது குழந்தைகளுக்காக வாழ்வதாக நினைத்துக்கொண்டாலும் அவன் உலகை விட்டுப்பிரிந்ததும், உண்மையில் — முடிவில் அது பிறருக்காக வாழ்ந்ததாகவே அமைந்துவிடுகின்றது. இந்த உண்மையின் அடிப்படையில் பார்க்கும்போது மனிதன் உண்மையிலேயே பிறருக்காகவே வாழ்கிறான் என்பது புலனாகின்றது. அதனால் மனிதன் தனது சுயநலமிக்க குறுகிய நோக்கத்தைக் கைவிட்டு உண்மையை உணர்ந்து பரந்த அடிப்படையில் தனது வாழ்வின் நோக்கத்தை விரிவுபடுத்திக்கொள்ளவேண்டும்

உலகாயதக் கண்ணோட்டத்தில் மனிதப்பிறவியின் நோக்கம் 'மக்கள் சேவை' என்பது முடிந்த ஒரு முடிவாகும். ''மனிதன் சேவை செய்யவே பிறக்கிறான்'' என்று காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் திரு. S. W. R. D. பண்டாரநாயகா அவர்கள் கூறிச் சென்றிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஆனால் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மனிதப் பிறவியின் நோக்கம் 'மக்கள் சேவை'யோடு இறைபணியும் தொடர்கிறது. [இவைபற்றித் தெளிவாக 'இரு கண்கள்' என்ற பகுதியில் பார்ப்போம்].

மனிதன் சமூகப் பிராணியானதால் அவன் தனித்து வாழ முடியாதவன். அவன் சமூக அங்கத்தவன். அவன் சமூகத்திற்குச் செய்யவேண்டிய பணியுமுண்டு. சமூகம் அவனுக்கு ஆற்றவேண்டிய பணியுமுண்டு. ஒரு சமூகம் அதன் அங்கத்தவனுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்காவிட்டால் அவனது அங்கத்துவத்தில் எந்தவிதப் பயனோ, அர்த்தமோ அற்றதாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கண்கள் :

''(மனிதர்களே!) நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். நிச்சயமாக இந்த உலக வாழ்க்கையெல்லாம் வீண் விளையாட்டும், வேடிக்கையும் அலங்காரமும்தான். அன்றி (அது) உங்களுக்கிடையில் (வீண்) பெருமையை உண்டாக்குவதாகவும், பொருள்களிலும் சந்ததிகளிலும் போட்டியுண்டாக்குவதாகவும் இருக்கிறது. (இதன் உதாரணமானது) ஒரு மழையின் உதாரணத்தை ஒத்திருக்கிறது. அதன் (உதவியால் முளைத்த) பயிர்கள் (நன்கு வளர்ந்து) விவசாயிகளுக்குக் களிப்பை உண்டுபண்ணிக்கொண்டிருந்தன. அவை காய்ந்த பின்னர் மஞ்சளிந்து வாடுவதை நீர் காண்கிறீர். பின்னர் அவை சருகுகளாய்விடுகின்றன. (இவ்வுலக வாழ்க்கையும் அவ்வாறேயிருச்கிறது.) மறுமையிலோ (அவர்களில் பலருக்குக்) கொடிய வேதனையும் (சிலருக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும் திருப்பொருத்தமும் கிடைக்கின்றன. ஆகவே இவ்வுலக வாழ்க்கை (மனிதனை) மயக்கும் (சொற்ப) இன்பமேயன்றி வேறன்று'' (57 : 20).

சொற்ப காலத்து இவ்வுலக வாழ்க்கையைப் பற்றித் தத்ரூபமாக – திட்டவட்டமாக - தெளிவாகத் திருக்குர்ஆனிலே தீட்டிவிட்டான் சர்வசத்தருள அல்லாஹ். இதை விடத் தெளிவான முறையில் கூறவல்லார் யார்? இவ்வுலக வாழ்க்கை ஒன்றையே பெரிதெனக் கருதும் பலர், அதன் சொற்ப இன்பத்தில் மயங்கி பொருள் (செல்வம்) ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு வாழ்வதை இன்று யாவரும் அறிவர். இவர்களின் வாழ்வின் குறிக்கோள் பொருளும் இன்பமுமே. இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள்தான் அடிப்படையென்று கூறினுல் ஏற்றுக்கொள்ளலாம். பொருள்தான் குறிக்கோள் என்ருல் யார்தான் ஏற்றுக்கொள்ள ஒருப்படுவர்? பொருளுக்காக – வயிற்றுக்காக மாத்திரம் மனிதன் வாழ்கிருன் என்ருல் அவனது வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடாதா? வாழ்வதற்காக மனிதன் உண்ணவேண்டுமே தவிர, உண்பதற்காக மாத்திரம் வாழ்வது மனிதனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகல்ல. இது தினமும் சாதாரண உயிரினங்கள் செய்வதே. சாதாரண உயிரினங்கள் போன்று மனிதனால் வாழ்ந்துவிட முடியுமா? சாதாரண ஓர் உயிருள்ள தாவரம் செய்யும் (உண்ணும்) தொழிலை, கேவலம், ஒரு மனிதன் அவனது வாழ்வின் நோக்கமாக — இலட்சியமாகக்கொள்ள முடியுமா? பூச்சி புழுக்கள் தாவரங்கள் மற்றும் பிராணிகள் போன்று மனிதனால் வாழ்ந்துவிட முடியாது. மனிதன் சிந்தனை சக்தியுள்ளவன். ஆறுவது அறிவான பகுத்தறிவு படைத்தவன். படைப்புகளில் தனிச் சிறப்புடையவன். உன்னதமானவன். அவனது வாழ்வு அர்த்தமுள்ளது. அவன் வாழ்வதற்காக உண்ண வேண்டியவன். மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி உண்டு என்பதை இதுவரை யாரும் மறுக்கவில்லை; இல்லையென்று நிரூபித்துவிடவுமில்லை. அந்தப் பரம்பொருளை அறியக்கூடிய (இறை) சிந்தனைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சமூகஅமைப்பு உயிரில்லாத உடலுக்கு ஒப்பானதே. ஆகவேதான், உடல் வளர்ச்சியோடு மனிதனுக்கு ஆத்மீக வளர்ச்சியும் அவசியம் என்கிறது இஸ்லாம்.

"அவன்தான் பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காகப் படைத்தான்" (2 : 28) என்று குறிப்பிடுகிறான் இறைவன். மனிதன் தன் தேவைக்கு இவையனைத்தையும் பயன்படுத்திக்கொள்ள இஸ்லாம் அனுமதியளிக்கிறது.

"எனக்கு வழிபட்டு என்னை வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நாம் படைக்கவில்லை" (51 : 56) என்று அல்லாஹ் குறிப்பிடுவதையும் நாம் கவனிக்கவேண்டும். எனவே, மனிதன் பூமியில் படைக்கப்பட்டது, இறைவனை வணங்குவதற்காகவே என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். எனவே, இவ்வுலக வாழ்வின் அடிப்படை அமைப்பான பொருளாதாரம் மாத்திரம் மனித வாழ்வின் நோக்கமாக அமைத்துவிடமுடியாது. மேல்மட்ட அமைப்புகளில் ஒன்றான இறை சிந்தனையை — ஆத்மீக உணர்வை ஒதுக்கிவிடமுடியாது. பொருளாதார சீரமைப்போடு இறை சிந்தனையும் அவசியம் என்கிறது இஸ்லாம். எனவே, மனிதனுக்கு இருக்கவேண்டிய இரு கண்களில் ஆத்மீகத்தை ஒரு கண் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுக்கு ஆத்மீக உணர்வு மாத்திரம் இருந்து விடமுடியாது. "(உலகவாழ்வை உதறிச்செல்லும்) துறவித்தனத்தை நாம் அவர்களுக்கு விதியாக்கவில்லை" (57:27) என்று இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிடுவதை நாம் கவனிக்காமலிருக்க முடியாது. ஆகவே இறைவன் வெறும் துறவித்தனத்தை மனிதனுக்கு விதியாக்கவில்லை.

"இம்மையில் உனக்குள்ள பங்கை மறந்துவிடாதே" (28:11) என்ற திருவசனம் உலகில் மனிதனுக்குள்ள பணியை ஞாபகப்படுத்துகிறதல்லவா? எந்த மனிதனுலும் ஆத்மீகத்தை மாத்திரம் அரவணைத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், இப்பிறவியின்றி மறுமையில்லை. அதனுல் இவ்வுலகமின்றி மறுவுலகமில்லை. எனவே இவ்வுலக வாழ்க்கையை ஒதுக்கித் தள்ளிவிடவோ துறந்துவிடவோ முடியாது. பிறந்த மனிதன் இவ்வுலகில் வாழ வேண்டியவன். பொருளின்றி (பணமின்றி) எவராலும் இவ்வுலகில் வாழ முடியாது. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை. மனிதனின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்ற மூன்றிற்கும் அடிப்படை பணம். ஆரோக்கியமான மனிதனின் உள்ளத்தில்தான் இறை சிந்தனை – ஆத்மீக உணர்வு இருக்கமுடியும். எனவே, இவ்வுலகில் மனிதன் ஆரோக்கியமாக - சிறப்பாக வாழ பொருளாதாரம் மிகமிக அவசியம்.

"நாமே பகலை (நீங்கள்) சீவனுேபாய (த்தைத் தேடிக் கொள்ளும் நேர) மாக்கினேம்" (78:11). என்று இறைவன் திருமறையில் வீணுகக் குறிப்பிடவில்லை. இதிலிருந்து மனிதன் தன் ஜீவனுேபாயத்தைத் தேடிக்கொள்வதற்கு உழைப்பது கடமை என்பது தெளிவாகின்றதல்லவா? எனவே இவ்வுலக வாழ்வுக்கு அடிப்படையான பொருளாதாரத்தை ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. பொருளாதார அமைப்புச் சீர்குன்றி மக்கள் வறுமைப்பட்டுவிட்டால் மனிதனிடத்தில் ஆத்மீக உணர்வு – இறைசிந்தனை இல்லாமல் அருகிப் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொடிய வறுமை ஈமானை (நன்னம்பிக்கையை) அழித்துவிடக்கூடிய சக்திவாய்ந்தது'' என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் எச்சரிக்கையை எந்த ஒரு உண்மை முஸ்லிமாலும் அசட்டைசெய்துவிடமுடியாது. அதனால்தான்,

''செல்வம் உங்களிடையேயுள்ள பணக்காரர்களிடமே மட்டும் சுற்றிவராமலிருக்கட்டும்'' [59:7] என்று எல்லாம் அறிந்த ஏகநாயன் திருக்குர்ஆனிலே முழங்குகிறான். எமது இன்றைய மார்க்க அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், படித்தவர்களும், இளைஞர்களும் இனிமேலாவது பொருளாதாரத்தைப்பற்றிச் சிரத்தையெடுக்கவேண்டும்.

இஸ்லாம் வெறுக்கும் சுருத்தடை; சீதனப் பிரச்சினை; பிச்சைக்காரர் பிரச்சினை; முதியோர் அங்கவீனர் பிரச்சினை; தொழிலற்றோர் பிரச்சினை போன்ற, இன்று முஸ்லிம்களை ஆட்டிப்படைக்கும் பிரச்சினைகளுக்கு அடிப்படைக்காரணம் பொருளாதாரம் என்பதை யாரால்தான் மறுக்கமுடியும்? எனவே யாரால்தான் பொருளாதாரத்தை ஒதுக்கிவைக்க முடியும்? பொருளாதார அமைப்பு, அரசியல் அமைப்பு, சமூக அமைப்பு ஆகிய மூன்றும் ஒன்றுடனொன்று தொடர்புடையவை என்பதையும், பிரிக்கமுடியாதவை என்பதை யும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. அவை மூன்றும் ஒரு மலரும், அதன் நிறமும், அதன் மணமும் போன்று ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கமுடியாதவை. இதை எவரும் மறுப்பதற்கில்லை. எனவே மனிதனுக்கு இருக்க வேண்டிய இரு கண்களில் ஒன்று ஆத்மீகமென்றால் அடுத்த கண் பொருளாதாரம் எனலாம். (பொருளாதாரம் பற்றி 'செல்வம்' என்ற தலைப்பில் காணலாம்).

ஆகவே, மனிதனுக்கு ஆத்மீக உணர்வு மாத்திரமோ, அல்லது பொருளாதாரம் மாத்திரமோ இருந்துவிட்டால் அவன் சம்பூரணமானவனாக இருக்க முடியாது. எந்த ஒன்றை இழந்தாலும் ஒரு கண்ணிழந்த குருடனே. ஆகவே, பொருளாதாரமும், ஆத்மீகமும் எமது இரு கண்கள். எந்தக் கண்ணையும் நாம் இழந்துவிட முடியாது; இழக்கவும் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரண்டும் இஸ்லாத்தில் தொழுகை, ஸக்காத்து என்ற, ஒரு முஸ்லிம் கட்டாயம் நிறைவேற்றவேண்டிய இரு கடமைகளையும் குறிக்கின்றன. தொழுகை என்பது ஆத்மீகத்தையும், சக்காத்து என்பது பொருளாதாரத்தையும் குறிப்பனவாகும். குர்ஆனில் இவ்விரண்டையும் ஒன்று சேர்த்தே அனேக இடங்களில் வழியுறுத்தப்பட்டிருப்பதை அதனை ஓதக்கூடியவர் அவதானிக்கலாம். இவ்விரண்டினதும் முக்கியத்துவத்தை உணர்ந்து மனிதன் செயல்பட்டால் ஈருலகங்களிலும் வெற்றி நிச்சயம்.

---

★ ★ ★

''அவனே, இரவைப் பகலில் நுழையும்படி செய்கிறான். பகலை இரவில் நுழையும்படி செய்கிறான் சந்திரனையும் சூரியனையும் (தன் கீழ்) அடக்கி வைத்திருக்கிறான். (இவை) ஒவ்வொன்றும் (அது அதற்குக்) குறிப்பிட்ட தவணைப்படி செல்லுகின்றன. இவன்தான் உங்கள் இறைவனாகிய அல்லாஹ். சகல ஆட்சியும் அவனுக்குரியதே! அவனையன்றி எவைகளை நீங்கள் (ஆண்டவனென) அழைக்கின்றீர்களோ அவைகளுக்கு ஓர் அணுவேனும் அதிகாரமில்லை'' (35:13).

❊ ★ ❊

''வானங்கள் பூமி ஆகிய இவ்விரண்டும் (தம் எல்லையிலிருந்து) விலகிவிடாதபடி தடுத்துக்கொண்டிருப்பவன் நிச்சயமாக அல்லாஹ்தான்! (தம் எல்லையிலிருந்து) அவ்விரண்டும் சாய முற்பட்டபோதிலும், அவை சாயாதபடி தடுக்கக் கூடியவன் அவனைத் தவிர வேறொருவனும் இல்லை. நிச்சயமாக அவன் பொறுமையுடையவனாகவும் மன்னிப்புடையவனாகவும் இருக்கிறான்'' (35 : 41).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரத்துவம் ?

"மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்திசெய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைச் சிருஷ்டித்து) அவரிலிருந்து அவரின் மனைவியைச் சிருஷ்டித்தான். பின்பு, அவ்விருவரிலிருந்து அநேக ஆண் பெண்களை (வெளிப்படுத்தி)ப் பரவச்செய்தான்."(4:1)

ஆதிபிதா ஆதம் (அலை) அவர்களுக்கும், அவர் மனைவி ஹவ்வா (அலை) அவர்களுக்கும் பிறந்தவர்கள்தாம் மனிதர்களென்பது இஸ்லாமியக் கோட்பாடு. அதனால் நிச்சயமாக மனிதர்கள் எல்லோரும் பிறப்பினால் சகோதரர்களே. மனிதப்பிறவி எடுத்த அத்தனைபேரும் சகோதரர்களே என்ற உயர் அடிப்படைக் கொள்கையை உலகிற்களித்தது இஸ்லாம். மொழிவேற்றுமை, இனவேற்றுமை, நிறவேற்றுமை, சாதிவேற்றுமை, தேசவேற்றுமை, தீண்டாமை இஸ்லாத்தில் கிடையாது. சகோதரத்துவத்தை முதன்முதல் உலகிற்களித்த பெருமை இஸ்லாத்திற்குரியது.

ஓர் உடன்பிறந்த சகோதரனிடம் எவ்வளவு அன்பு, பாசம், இரக்கம், அக்கறை வைத்திருக்கின்றோமோ அதே போன்று மற்றவர்களிடமும் வைத்திருப்பதுதான் சகோதரத்துவத்தின் உண்மையான இலட்சணம். தனது தேவையை நிறைவேற்றுவதைவிட பிறரின் தேவையை நிறைவேற்றி வைப்பதுதான் உண்மையான சகோதரத்துவம். தற்காலத்தில் நிலவும், முதலாளி, தொழிலாளி என்ற வர்க்கப் பிரிவினைகளோ, ஆளும் வர்க்கம், ஆளப்படும் வர்க்கம் என்ற வேறுபாடுகளோ இஸ்லாத்தில் கிடையாது. பெரும் சாம்ராஜ்யங்களையெல்லாம் ஆட்டிப்படைத்த கலீபரசர் உமர் (ரலி) அவர்கள், முஸ்லிம்படையால் கைப்பற்றப் பட்ட பைத்துல் முகத்திஸை ஏற்றுக்கொள்வதற்குச் சென்ற விதம் யாரால்தான் மறக்கமுடியும்? பீத்தல் தைக்கப்பட்ட அங்கி அணிந்தவர்களாக தமது சேவகர் ஒருவருடன் ஒட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையொன்றில் மதீனாவிலிருந்து ஜெரூஸலத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். கலீபரசர் முதல்நாள் தாம் ஒட்டகையில் ஏறியும் மறுநாள் தமது சேவகரை ஏற்றிக்கொண்டும் இப்படி மாறிமாறிப் பிரயாணம்செய்தார்கள். ஜெரூஸலத்தை அடையும்போது சேவகனின் முறைவந்தது. கலீபரசரை ஏறிவரும்படி சேவகன் எவ்வளவோ வேண்டியும் அவர் இசையவில்லை. ராஜகம்பீரத்துடன் வருவார்கள் என்று எதிர்பார்த்த ஜரூஸல மக்களுக்கு கலீபரசரின் இக்கோலம் ஆச்சரியமாகவிருந்தது. யாருக்குத்தான் ஆச்சரியமாக இருக்காது. இந்நிகழ்ச்சி இஸ்லாத்தில் மனிதாபிமானம், அன்பு, சகோதரத்துவம் இவற்றின் முன் வர்க்கபேதமைக்கு இடமில்லை என்பதைப் புலப்படுத்துகின்றதல்லவா? இஃது இஸ்லாமிய சகோதரத்துவத்தின் தனிச்சிறப்பல்லவா? ஆனால் இன்று எம்மிடம் இஸ்லாம் கூறும் சகோதரத்துவம் உண்டா? மற்றவர்களிடம் உண்மையாகவே அன்பு செலுத்துகின்றோமா? என்று எம்மை நாமே கேட்டுக்கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

''மக்களிடம் இறங்காதவன்மீது அல்லாஹ்வும் இறங்க மாட்டான்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். உண்மையிலேயே நாம் அனைத்து மக்களிடமும் உண்மையாகவே இரக்கம் கொண்டுள்ளோமா?.

''நீ எதை விரும்புகின்றாயோ அதையே மற்றவருக்கும் விரும்பு'' என்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பொன் மொழியின் உயர் தத்துவத்தை நாம் கவனிக்கவேண்டும். பிறரிடம் எவ்வளவு அன்பு செலுத்தவேண்டும் என்பது இதிலிருந்து புலனாகின்றதல்லவா?

மற்றவர்களிடம் அன்பு, இரக்கம்கொள்வது ஒருபுறமிருக்க, இன்று உடன்பிறந்த சகோதரர்களிடம்கூட அன்பு, பாசம், இரக்கம் என்பன இருக்கின்றனவா? என்பது சந்தேகம். இன்று எம்மத்தியில் பணம், சொத்து சேர்க்க வேண்டும் என்ற ஆசை வரம்பு மீறி வளர்ந்துவிட்டது. ''தான் உண்டு தன்பாடுண்டு, மற்றவர்கள் எப்பாடுபட்டாலும் சரி'' என்ற அசட்டுப்போக்கு இன்று நிலவுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இன்று எமது ஈழநாட்டில் வாழும் மக்கள் எந்த வழியிலாவது பணம் - சொத்துச் சேர்த்துவிடவேண்டும் என்று துடியாகத் துடிப்பதைக் காணலாம். பணம்சேர்க்கும்பொருட்டுக் குறுக்குவழிகளைக் கையாளத் தயங்குவதில்லை. பணத்திற்காக குற்றச்செயல்களான கொலை, கொள்ளை, திருட்டு, ஏமாற்றுதல், மோசடி, சுரண்டல், கள்ளக்கடத்தல், கலப்படம் போன்றவற்றைத் தயங்காது செய்கின்றனர். இன்று நிலவும் சமூகமைப்பு திருப்தியில்லாத - பாதுகாப்பற்ற ஒரு வாழ்க்கை முறைக்கு வழிவகுத்துள்ளதே இவற்றுக்குக் காரணம்.

இன்று இங்கு நிலவும் சமூகமைப்பில் உண்மையான சகோதரத்துவத்திற்கு இடமில்லை. திருப்தியற்ற ஒரு நிலை நிலவுகின்றது. உடன்பிறந்த சகோதரர்களுக்கிடையில்கூட பணம் - சொத்து காரணமாகப் பிரிவினைதோன்றி வேற்றுமைப்பட்டிருப்பதை இன்று சர்வசாதாரணமாகக் காணலாம். சின்னஞ்சிறு வயதில் கொழுந்துவிட்டுவந்த அன்பு-பாசம் - இரக்கம் வயதுவந்ததும் - பொறுப்பு வந்ததும் இன்று நிலவும் சமூகமைப்பில் விடைபெற்றுக்கொள்கிறது. இதை யாரால்தான் மறுக்கமுடியும்?

இஸ்லாம்தான் முதன்முதல் சகோதரத்துவத்தை உலகிற்களித்தது என்று கூறிக்கொள்கிறோம். ஆனால் நடைமுறையில் நடப்பதென்ன? எம்மில் வசதிபடைத்த ஒரு பணக்காரர் கூட்டுத் தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் சென்றால் தன் வீட்டு வேலைக்காரன் தன் பக்கத்தில் நின்று தொழுவதை அவரது முதலாளித்துவ சிந்தனை அனுமதிக்கிறதா? இஸ்லாத்தை உணர்ந்தறிந்த ஒரு புதிய முஸ்லிமை மௌலா இஸ்லாம் (புதிய முஸ்லிம்) என்று கூறி இழிந்த கண்கொண்டு பார்த்து ஒதுக்கிவைக்கவில்லையா? இன்று எத்தனை பணக்காரர் வறிய மக்களின் இன்பதுன்பங்களில் பங்குகொள்கிறார்கள்?

இன்று எமது சகோதரர்களில் எத்தனையோபேர் தற்கொலைசெய்துகொள்வதை நாம் பார்க்கிறோம். பெரும்பாலான தற்கொலைகளுக்குக் காரணமாய் அமைவது பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தற்கொலைசெய்துகொள்பவர்களுக்கு நரகம்தான்'' என்று வாயளவில் கூறிவிட்டுப்போகின்றோமேயொழிய இனிமேலாவது தற்கொலைகள் நடக்காமலிருக்க நாம் என்ன நடவடிக்கைகள்தாம் எடுத்துள்ளோம்? சமூகத்தில் வாழும் எமது சகோதரர் ஒருவர் பொருளாதாரக் கஷ்டத்தின் காரணமாகத் தற்கொலை செய்துகொண்டால் அவன் நரகம் புக நாமும் காரணமாவதில்லையா? அவன் சமூகத்தில் அங்கத்தவனாக இருப்பதால் எமது அன்றாடப் பொருளாதார நடவடிக்கைகள் அவனைப் பாதிக்கவில்லையென்று எம்மால் எப்படிக் கூறமுடியும்?

எல்லா உயிர்களிடத்தும் அன்புசெலுத்தவேண்டும் என்கிறது இஸ்லாம்.

''நிச்சயமாக, ஒரு பரத்தை ஒரு வெப்பமான நாளில் ஒரு நாய் ஒரு கிணற்றடியில் சுற்றிக்கொண்டிருப்பதைக் கண்டாள். கடுமையான நீர்வேட்கையின் காரணமாக அதன் நாக்கு மெய்யாகவே வெளியில் தொங்கிக்கொண்டிருந்தது. எனவே, அவள் தனது காலுறையைக் கிணற்றில் விட்டுத் தண்ணீர் இறைத்து அதற்குப் பருகக்கொடுத்தாள். அதன் காரணமாக' அவளை அல்லாஹ் மன்னித்து விட்டான்'' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இச்சம்பவத்திலிருந்து உயிர்களிடத்து அன்பு செலுத்துவது—பட்சாத்தாபப்படுவது—இரக்கம்கொள்வது எவ்வளவு உயர்வானது என்பதுவும் நன்மை பயக்க வல்லது என்பதுவும் புலனாகின்றதல்லவா? ஆனால், நாம் எம் இனமான மனிதர்களிடத்திலாவது உண்மையான அன்பு செலுத்துகின்றோமா? வறுமையால் வாடும் எமது சகோதரர்களிடம் உண்மையிலேயே பட்சாதாபப்படுகின்றோமா? இரக்கப்படுகின்றோமா?

அன்பின் வழி பிறப்பதுதான் சகோதரத்துவம், அதன் வழி பிறப்பதுதான் தியாக சிந்தை. இன்று எம்மில் எத்தனைபேர்தாம் பிறரை வாழவைப்பதற்காகத் தம்மைத் தியாகஞ்செய்யத் தயாராய் இருக்கின்றார்கள்? வறுமையால் வாடும் ஓர் ஏழைச் சகோதரனும் தன்னைப்போல் சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகளுடனும் எல்லாம் பெற்று சந்தோஷமாக வாழ வேண்டும் என்று எம்மில் இன்று எத்தனைபேர் விரும்புகின்றார்கள்? ஆனால், வெறும் வாயளவில் மேடைகளில் சகோதரத்துவத்தைப்பற்றி முழங்குவதற்குப் பேச்சாளர்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் நடைமுறையில் சகோதரத்துவத்தின் உண்மையான தாத்பரியத்தை அமுல்நடத்துவதற்கு எம்மில் எத்தனைபேர்தாம் தயாராய் இருக்கின்றார்கள்?

''அயலவன் பசித்திருக்கும்போது நீ மாத்திரம் உண்ணாதே'' என்ற எம்பெருமானாரின் போதனையின் மகத்துவத்தை உணர்ந்து நடக்கின்றோமா? நாம், எமது வறிய சகோதரர்கள் அன்றாடம் பட்டினியோடு போராடுவதை—வறுமையின் கொடுமையின் காரணமாக எமது வயது முதிர்ந்த பெற்றோரும், சகோதர சகோதரிகளும் பிச்சை எடுக்கச் செல்லும் அவலக்காட்சியைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கவில்லையா? மானம் ஒன்றே பெரிதெனக்கருதி வாழும் அநேக வறிய மக்கள், தமது பெண்மக்களைக் கரை சேர்ப்பதற்காகப் பிச்சையெடுக்கச் செல்லவும் முடியாமல், பிச்சையெடுக்காமல் வாழவும் முடியாமல் இரண்டுங்கெட்டான நிலையில் தினம்தினம் எண்ணியெண்ணிக் கவலையால் கரைந்துருகிக் கடைசியில் கட்டையேறும் காட்சியை நாம் பார்த்துக் கொண்டு வாளாவிருக்கவில்லையா? அன்றாடம் கட்டாயம் நிறைவேற்றவேண்டிய ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் தவியாய்த்தவிக்கும் சேரிவாழ் வறிய முஸ்லிம் சகோதரிகளின் பரிதாப நிலையை நாம் பார்த்துக்கொண்டிருக்கவில்லையா? எமது சகோதரிகளிற் சிலர் தமது கொடிய வறுமையின்காரணமாக கொடிய விபசாரத்தைத் தொழிலாகக்கொண்டு சீவனம் நடத்துவதை நாம் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கவில்லையா? இவர்கள் எல்லோரும் வாழப்பிறந்தவர்கள் - வாழ்வளிக்கப்படவேண்டியவர்கள் என்பதை உணர்ந்து நாம் செயல்படவேண்டாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவும் சமூகஅமைப்பில் சீதனப் பிரச்சினையால், தமக்கு வாழ்வளிப்பார் யாருமின்றி கண்ணீராய்க் கரைந்துகொண்டிருக்கும் எமது கன்னிச் சகோதரிகளின் பரிதாப நிலைக்கு யார்தான் காரணம்? சிந்திக்கவேண்டாமா? செயல்படவேண்டாமா? இனிமேலாவது இஸ்லாம் கூறும் உண்மையான சகோதரத்துவத்தின் தாத்பரியத்தை உணர்ந்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்று, விசேஷமாக இலங்கை முஸ்லிம்களை எதிர்நோக்கியுள்ள சீதனம் – தொழிலற்றோர் – பிச்சைக்காரர் - முதியோர் – அங்கவீனர் - காணி நிலம் வீடற்றோர்போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தும் எமது நாட்டில் இருக்கும்வரை ''நாம் உண்மையான இஸ்லாமிய சகோதரத்துவ உணர்ச்சியுடையவர்கள்'' என்று பெருமையாகக் கூறிக்கொள்வதில் உண்மையில் எந்தவித அர்த்தமுமில்லை.

சமூகப்பற்றோ, நாட்டுப்பற்றோ இல்லாமல் வெறும் 'தப்லீக்' பிரசாரங்கள் சமூகத்தில் எந்தவிதமான உருப்படியான மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது. சமூகத்தை ஏமாற்றிப் பிழைக்கும் சில முல்லாக்களும், போலி பிற்போக்கு சுயநலமிக்க அரசியல் தலைவர்களும், சமூகத் தலைவர்கள் என்போரும் தம்மிடம் இஸ்லாம் கூறும் உண்மையான சகோதரத்துவ உணர்ச்சி உண்டா? என்று தம் நெஞ்சங்களைத் தொட்டுக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

நிச்சயமாகச் சிறந்த ஒரு பக்திமான் இறைபடைப்புகளிடத்து சிறந்த அன்புடையவராய் இருப்பான். சிறந்த அன்புடையவன் சிறந்த சகோதரத்துவ உணர்ச்சியுள்ளவனாக இருப்பான். சிறந்த சகோதரத்துவ உணர்ச்சியுள்ளவன் சிறந்த ஒரு தியாகியாக இருப்பான். தன் உடல், பொருள், உயிர் - அத்தனையும் சமூகத்திற்காக நாட்டிற்காக தியாகஞ்செய்யக்கூடியவனே உண்மையான தியாகியாவான். இதுதான் சகோதரத்துவத்தின் உண்மையான தாத்பரியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பு ?

''நாமே பகலை (நீங்கள்) ஜீவனோபாய (த்தைத் தேடிக் கொள்ளும் நேர) மாக்கினோம்'' (78:11) (அல்குர்ஆன்)

* * *

'' (உலக வாழ்வை உதறிச்செல்லும்) துறவித்தனத்தை நாம் அவர்களுக்கு விதியாக்கவில்லை'' (57:27) என்று அல்லாஹ் திருமறையில் கூறுகிறான், இத்திருவசனம் உலகிலுள்ள தனது கடமைகளை நிறைவேற்றாது வெறும் துறவித்தனத்தை நாடும் துறவிகளைக் கண்டிப்பதோடு உழைக்க வேண்டும்; பாடுபடவேண்டும் என்பதை வற்புறுத்துகின்றதல்லவா?

'' (மனிதனுக்கு) அவனது உழைப்பின் அளவேயன்றி (வேறு) உயர்வு கிடையாது'' (53:39) என்று அல்குர்ஆன் முழங்கிக்கொண்டிருக்கிறது. நிறத்தாலோ, இனத்தாலோ, மொழியாலோ, பிறப்பாலோ, பணத்தாலோ ஒரு மனிதனின் சிறப்பு நிர்ணயிக்கப்படுவதில்லை என்ற உயர் அடிப்படைக் கொள்கையை உலகிற்கு முழக்கமிட்டு நிற்கும் காலத்திற்கேற்ற கர்வூலம் அல்குர்ஆன்.

உழைப்பைப்பற்றி இன்னும் இறைவன் கூறுகிறான் ''நாமே இரவை (உங்களுக்கு) ஒரு போர்வையாக்கினோம். இன்னும் நாமே பகல் பொழுதை வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தேடிக்கொள்ளும் நேரமுமாக்கினோம்'' (78:10,11). இத்திருவசனங்களில் அல்லாஹ் உழைப்பையும் ஓய்வையும் விளக்குகிறான்.

''பெண்கள் ஆண்டாண்டுதோறும் வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடக்கவேண்டும் அவர்கள் தொழில் பார்க்கக் கூடாது'' என்று எம்மில் சிலர் குழறுவதற்கு இஸ்லாத்தில் ஆதாரமில்லை. இஸ்லாமிய ஒழுக்க வரம்புகளை மீறாமல் தமது அன்றாட பொருளாதார அரசியல் சமூக நடவடிக்கைகளில் ஈடுபட பெண்களுக்கு உரிமையும் சுதந்திரமும் உண்டு. சர்வமும் அறிந்த அல்லாஹ் கூறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவற்றில் உரிமையிருக்கிறது. (அதுபோலவே) பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவற்றில் உரிமையிருக்கிறது, (எனவே உழைப்பதன்மூலம்) அல்லாஹ்விடமிருந்து அவன் நல்லருளைக் கோருங்கள்; நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவனாக இருக்கிறான்" (4:32).

ஆண்கள் மாத்திரம்தாம் பொருள் தேடுவதற்கோ வியாபாரஞ்செய்வதற்கோ உரிமையுடையவர்களல்லர். இத்தகுதி பெண்களுக்குமுண்டு. ஆண்களும் பெண்களும் நல்ல விதமாகத் தொழில்செய்து உழைத்து எல்லோரும் இறைவனின் நல்லருளுக்குப் பாத்திரமாகவேண்டும் என்கிறது திருமறை.

ஒருநாள் உமர் (ரலி) அவர்கள் மக்களைப்பார்த்து, "'யாராவது வீட்டிற்குள் முடங்கி யிருந்துகொண்டு 'இறைவா! எனக்கு உணவளி' என்று கேட்கவேண்டாம், வானம் பொழிவது தங்கத்தையல்ல நீரைத்தான் என்பது நினைவிருக்கட்டும்'' என்றார்கள். வானம் பொழிவது நீரானதால் அந்நீரிலிருந்து மனிதன் தனக்கு வேண்டிய உணவுப் பொருட்களைப் பயிரிட்டுக்கொள்வது அவனது கடமை. பயிரிடாமல் உண்ணுவது என்பது முடியாத காரியம்.

மற்றொருநாள் உமர் (ரலி) அவர்கள் பள்ளிவாசலில் நின்றிருந்த ஒரு கூட்டத்தாரை பார்த்து "நீங்கள் யார்?" என்று வினவினார்கள். அதற்கு அவர்கள் "நாங்கள் அல்லாஹ்வின்மீது பாரஞ்சாட்டியவர்கள்" என்றனர். உடனே கலீபா அவர்கள் "நீங்கள் சொல்வது உண்மையாயிருக்க முடியாது, உண்மையில் பாரஞ்சாட்டியவர்கள் யாரெனில் பூமியைப் பண்படுத்திப் பயிரிட்டு அல்லாஹ்விடம் பாரஞ்சாட்டியதுடன் நில்லாது அது பயனளிக்கும்வரை உரமிட்டு, நீர்பாய்ச்சி, பாதுகாத்து, அதன் பிரயோசனத்தில் அவனும் உண்டு, மற்றவர்களுக்கும் உண்ணக்கொடுப்பவனே" என்றார்கள். இவற்றிலிருந்து இஸ்லாம் மனித முயற்சிக்கும் உழைப்புக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "மனிதர்கள் பூமியை வளப்படுத்துவதில் – உழைப்பதில் உள்ள அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அறிவார்களாயின் பூமியில் ஒவ்வொரு துண்டு நிலமும் வீணேயிருக்காது" என்றும், "எவனொருவன் கடும் உழைப்பின் காரணமாகக் களைத்துப் போய் உறங்கிவிடுகிருனே அவனது பாவங்கள் இறைவனால் மன்னிக்கப்படும்" என்றும் கூறி, உழைப்பின் சிறப்பை உணர்த்தியிருக்கிருர்கள். "மேலிருக்கும் கரம் கீழிருக்கும் கரத்தைவிடச் சிறந்தது" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதைக் கவனிக்கவேண்டும். பிறரிடம் கையேந்திப் பிச்சை கேட்பதன் இழிவையும், உழைப்பின் உயர்வையும் இப்பொன்மொழி விளக்குகின்றதல்லவா? பெருமாஞர் (ஸல்) அவர்கள் உழைப்பின் உயர்வைப்பற்றி மேலும் கூறுகிருர்கள்: "தம் கையால் உழைத்து உண்பதை விட மிகவும் மேலான உணவை எவரும் உண்பதில்லை". இவ்வமுதமொழி உழைத்து உண்பதன் முக்கியத்துவத்தையும், பிறர் உழைப்பில் வாழ்வதன் இழிவையும் உணர்த்துகின்றதல்லவா? நபி தாவூது (அலை) அவர்களும் கூட தம் கையால் உருக்குச் சட்டைகளைச் செய்து விற்று அதன் மூலம் ஜீவனம் நடத்தியதாகச் சரித்திரம் கூறுகின்றது. ஏன்? எம்பெருமாஞர் (ஸல்) அவர்களும் ஆடுமேய்க்கவில்லையா?

"மனிதனே, உன்னை நான் அசைந்து தொழிற்படும் வகையில் படைத்துள்ளேன், உன் உடலை அசைத்து உழை" என்று அல்லாஹ் தௌராத் வேதத்தில் கூறியிருக்கின்ருன். உழைக்கும் மக்களுக்கே இவ்வுலகம். உழைக்காத பிறர் உழைப்பில் வாழ்பவர்களும். பிறரைச் சுரண்டி வாழ்பவர்களும் வேருெரு உலகைத் தேடிக்கொள்ளவேண்டியதுதான்.

இன்று பொருளாதாரத்துறையில் முன்னணியில் நிற்கும் நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணம் சமூக அரசியல் பொருளாதார மாற்றத்திஞல் ஏற்பட்ட அந்நாட்டு மக்களின் அயராத உழைப்பன்றி வேறல்ல, அப்பாட்டாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வியர்வைத்துளிகள்தாம் அந்நாட்டு மக்களின் இன்றைய உயர்நிலைக்குக் காரணம்.

எல்லோரும் சகோதரர்களே என்ற சகோதரத்துவத்தையும், எல்லோரும் எல்லாம் பெற்று வளமாக வாழ வேண்டுமென்ற சமத்துவத்தையும், சமதர்மத்தையும் அறிமுகப்படுத்தியது இஸ்லாம்தான் என்று எமது மார்க்க அறிஞர்களும் சமூகத் தலைவர்கள் என்போரும் கூறிக் கொண்டிருப்பதில் எந்தவிதப் பயனையும் எதிர்பார்த்துவிடவும் முடியாது; அப்படிக் கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமுமில்லை. இவற்றை அமுல் நடத்த, செயல்படுத்த இளைஞர்கள் முன்வரவேண்டும். மாறும் சமூகமைப்பின் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக, மாற்றங்களை விரும்பக்கூடியவர்களாக, மாற்றங்களைச் செய்யக்கூடியவர்களாக நாமும் மாறுவிட்டால் எமது நிலை பரிதாபமாகிவிடும்.

---

''அல்லாஹ்தான் காற்றுக்களை அனுப்புகிறான். அவை மேகங்களை ஓட்டுகின்றன. பின்னர் நாம் அவைகளை இறந்து (பட்டுப்)போன நிலத்தளவில் செலுத்தி (மழை பொழிவித்து) அதனைக்கொண்டு இறந்துபோன பூமியை உயிர்ப்பிக்கின்றோம். (மரித்தோர் மறுமையில்) உயிர்பெற்றெழுவதும் இவ்வாறே'' (35 : 9).

''பூமியிலுள்ள மரங்கள் யாவும் எழுதுகோல்களாகவும், சமுத்திரம் (ஜலம் மையாகவு)ம் இருந்து (அது தீர்ந்து) பின்னும் ஏழு சமுத்திரங்கள் (மையாக) இருந்து (எழுத) உதவியபோதிலும், அல்லாஹ்வுடைய வசனங்கள் (எழுதி) முடிவுபெறா. நிச்சயமாக அல்லாஹ் (யாவையும்) மிகைத்தோனும் ஞானமுடையோனுமாய் இருக்கிறான்.'' (31:27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம் ?

"...... செல்வம் உங்களிடையேயுள்ள பணக்காரர்களிடமே மட்டும் சுற்றிவராமலிருக்கட்டும்" (59:7).

* * *

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை,'
'இல்லானை இல்லாளும் வேண்டாள்,
ஈன்றெடுத்த தாய் வேண்டான்,'
'பணம் இல்லாதவன் பிணம்,'
'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்,'
'பணம் பாதாளம் மட்டும் பாயும்'.

போன்றவை பணத்தின் மதிப்பைக் காட்டுகின்றனவல்லவா? மறுவுலகிற்கு அருள் எப்படியோ, இவ்வுலகிற்குப் பொருளும் அப்படியே. அவ்வுலகம் ஆத்மீகமென்றால், இவ்வுலகம் பொருளாதாரம். மனிதனின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்ற மூன்றிற்கும் அடிப்படை பணம் என்பதை யாவரும் அறிவர். அல்லாஹ்வைத் தொழுவதற்கும் பணம் தேவையென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் தொழுவதற்கு நல்ல ஆரோக்கியம் தேவை; நல்ல ஆரோக்கியத்திற்கு நல்ல உணவு அத்தியாவசியம்; பணமின்றி அந்த உணவைப் பெறமுடியாது. இப்படிப்பட்ட பண (செல்வ)த்தைப்பற்றி இஸ்லாம் என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம்.

"அவன்தான் பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காகவே படைத்தான்" (2:29) என்று அல்குர்ஆன் குறிக்கிறது. பூமியிலுள்ள அத்தனைப் பொருட்களிலிருந்தும் மனிதன் தன் வாழ்வை வளம்படுத்துவதற்காகத் தூயவழிகளில் தேவையானவற்றைத் தேடிக்கொள்ள இஸ்லாம் அனுமதியளிக்கிறது. ஆனால் தேடித்தேடிப் பொருட்களைக் குவித்துவைத்துக்கொள்ள மனிதனுக்கு அனுமதியில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செல்வம் உங்களிடையேயுள்ள பணக்காரர்களிடமே மட்டும் சுற்றிவராமலிருக்கட்டும்'' (59:7) என்று திட்ட வட்டமாக அல்குர்ஆனிலே சர்வசக்தனான அல்லாஹ் தெளிவுபடுத்திவிட்டான். இஃது ஆண்டவன் கட்டளை. இன்றைய சமதர்மப் பொதுவுடமைக் கொள்கைகள் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே 'பணம் உங்கள் மத்தியிலுள்ள பணக்காரர்களிடம் மாத்திரம் சுற்றிவராமலிருக்கட்டும்' என்று கட்டளையிட்டுவிட்டான்! இன்றைய முதலாளித்துவ முறையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே கண்டித்திருக்கிறான் எல்லாம் அறிந்த அல்லாஹ்.

''இவ்வுலகில் உனக்குள்ள பங்கை மறந்துவிடாதே'' (28:77).

என்று இறைவன் எச்சரிப்பதை நாம் கவனிக்கவேண்டும். ஒவ்வொருவரும் தத்தமது சொந்தத் தேவைகளையும் நன்மைகளையும் மாத்திரம் கவனித்துக்கொண்டு வணக்கம் புரிந்துவிட்டால் போதும் என்று இஸ்லாம் போதிக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டல்ல இதன் பின்னுள்ள காலங்களெல்லாம் கண்டு வியக்கக்கூடிய புரட்சிகரமான கொள்கைகளையெல்லாம் இஸ்லாத்திலே அமைத்துவைத்துள்ளான் சர்வமும் அறிந்த அல்லாஹ்! ஒரு மனிதன் தனது தேவைக்கதிகமான பணத்தைச் சம்பாதித்தால் அத்தொகை முழுவதும் அவனுக்குத் தேவையிராது என்ற காரணத்தினால் இன்றைய அரசாங்கங்கள் வருமான உச்சவரம்புச் சட்டங்களை விதித்து அவன் சம்பாதித்தவற்றில் ஒரு பகுதியை வரியாக எடுத்துக்கொள்கின்றன. சட்டத்தின்பேரால் வற்புறுத்தி வாங்கப்படுகிறது அந்த வரி.

''நாம் எதைச் செலவு செய்வது என்று அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். தேவைக்கு மிஞ்சியிருப்பதை எனக் கூறுவீராக'' (2:219).

என்ற திருக்குர்ஆன் வசனத்தை நாம் கவனிக்க வேண்டும்.

'தேவையானது போக மீதமுள்ளதை பிறருக்கு வழங்குங்கள்' என்கிறது இஸ்லாம். 'அயலவன் பசித்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது நீ மாத்திரம் உண்ணுதே' என்ற அண்ணல் நபி(ஸல்) அவர்களின் கட்டளை 'மனிதர்கள் சமூக உணர்ச்சி உள்ள வர்களாக வாழவேண்டியவர்கள்; பிறந்தவர்கள் அனைவரும் உண்ணவேண்டியவர்கள்; எல்லோரும் வாழவேண்டியவர்கள்' என்ற சமதர்மத்தின் உயர் அடிப்படைக் கொள்கை களை வற்புறுத்துகின்றதல்லவா? ஆனால் எம்மில் எத்தனை பேர் இதனை ஆய்ந்துணர்ந்து பின்பற்றுகின்றனர்?

பணம்மட்டுமல்ல சொத்து, நிலபுலன்கள், ஆஸ்தி அத்தனையும் ''என்னுடையவை'' என்று மனிதன் கூறுவ தற்கு இஸ்லாத்தில் இடமில்லை. அல்லாஹ் தன் திருமறை யில் கூறுகிறுன்:

''நிச்சயமாக இந்த பூமி அல்லாஹ்வுக்கே உரியதா கும்'' (7:128) என்று, தனி மனிதனுக்கு எதையும் உரிமை பாராட்ட முடியாது. அந்த உரிமை அல்லாஹ்வுக்கே. இறைவனின் சந்நிதானத்தில் எல்லாம் பொது.

இறைவன் தனவந்தர்களை எச்சரிப்பதுபோல், வறிய வர்களை குர்ஆனில் எந்த இடத்திலும் எச்சரிக்கவில்லை. தனியுடைமைவாத முதலாளித்துவத்திற்கு இஸ்லாத்தில் கிஞ்சித்தேனும் இடமில்லை. தனியுடைமைவாதிகளுக்கு நரக நெருப்புத்தான் இருக்கின்றது என்ற இறைவனின் கடும் எச்சரிக்கை அடங்கிய திருவசனங்களைக் கீழே காணலாம்.

''(நரக நெருப்பு, பொருளைச்) சேகரித்து (ச் செலவுசெய் யாது) பத்திரப்படுத்தி வந்தோரையும் (தன்னிடம் அழைக்கும்)'' (70:18)

''பொருளைச் சேகரித்து அதனை நல்லமுறையில் செலவு செய்யாமல் அதனைக் கணக்கிட்டுக்கொண்டே இருப்பவனுக்கு நிச்சயமாக நரக நெருப்பு இருக்கிறது'' (104:23, 24).

''எவர்கள் பொன்னையும், வெள்ளியையும் சேகரித்து வைத்துக்கொண்டு, அதனை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாமல் இருக்கின்றனரோ அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை இருக்கிறது'' (9:34) என்று பணக்கார வர்க்கத் தைக் கண்டிக்கிறுன் இறைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வானங்களுடையவும், பூமியுடையவும் இவற்றிற்கு இடையேயுள்ளவையினுடையவும் ஆட்சியுரிமை அல்லாஹ்வுக்கே உரியது'' (5:17)

''நிச்சயமாக இந்த பூமி அல்லாஹ்வுக்கே உரியதாகும்'' (7:128).

''வானங்களிலும் பூமியிலும் உள்ள யாவும் அல்லாஹ்வுக்குரியனவே (எனினும்) நிச்சயமாக (இவற்றின்) தேவையற்றோனும், மிகப் புகழுடையவனுமாக இருப்பவனே அல்லாஹ்'' (31:36).

என்ற திருவசனங்கள் இறைவனின் ஆதிக்கத்தை உரிமையைக் காட்டுகின்றன. இறைவனால் படைக்கப்பட்ட அத்தனையும் மனிதனுக்கே என்றாலும் தனிப்பட்டவர்களுக்கு அவற்றில் உரிமை கொண்டாட முடியாது. அந்த உரிமை, அந்த ஆதிக்கம் அல்லாஹ்வுக்கே, மனிதன் தான் சேர்த்த பொருளைப் பிறருக்கு வழங்கி வாழ்வதே இறைவன் விரும்பும் அன்பு வழி. இதை அடிப்படையாகக் கொண்டே தேங்கிக்கிடக்கும் பொருளும், தரிசாகக் கிடக்கும் நிலமும் மக்களுக்குப் பயன்படாமல்போகாதபடி இஸ்லாம் ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னே சட்டமியற்றியது. பொருளில் நாற்பதில் ஒரு பங்கு (ஸக்காத்து) கொடுக்க வேண்டும் என்ற கட்டாயக் கடமையைத் தொழுகைக்கு அடுத்தபடியாக வைத்திருக்கிறான் இறைவன். ''தொழுகை இல்லாதவனுக்கு ஈமான் இல்லை, சக்காத்துக் கொடுக்காதவனுக்குத் தொழுகையில்லை'' என்பது எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருவாக்கியமாகும். அல்குர்ஆனில் அநேக இடங்களில் தொழுகையுடன் ஸக்காத்தை எப்போதும் சேர்த்துக்கூறப்பட்டிருப்பதைக் காணலாம். தொழுகை மறுமைக்கு – இறைவனையடைய வழிவகுக்கும் அதேவேளையில் ஸக்காத்து இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவருடையவும் உயிர்வாழ்க்கைக்கு வழிவகுக்க இறைவனால் வகுக்கப்பட்ட வழிமுறையாகும். இப்படிப்பட்ட ஸக்காத்தின் தாத்பரியத்தை இன்னும் நாம் உணர்ந்து செயல்படவில்லை. தனவந்தர்கள் என்றும் தனவந்தர்களா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவும், ஏழைகள் என்றும் ஏழைகளாகவும் இருக்கவேண்டு மென்று இறைவன் விரும்பியிருந்தால் அவன் 'ஸக்காத் தை'க் கடமையாக்கியிருக்கமாட்டான்! ஸக்காத்தை நிறை வேற்றுவதற்குச் சமூகமைப்பில் கண்டிப்பாக வறிய மக்கள் இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இஸ்லாத்தில் இல்லை. ஸக்காத்துப்பெற அருகதையுடையவர்கள் சமூகமைப்பில் இல்லாவிட்டால் அரசாங்கத்திற்கு சக்காத்தைக் கொடுத்து விடவேண்டும். சக்காத்தைக் கொடுக்க மறுப்பவர்களிட மிருந்து அரசாங்கம் சக்காத்தைப் பலாத்காரமாகப் பெற் றுக்கொள்ளவும், அத்தகையவர்களைத் தண்டிக்கவும் இஸ் லாம் அனுமதிப்பதோடு அவர்களின் செல்வத்தில் ஒருபகுதி யைப் பெற்றுக்கொள்ளும் உரிமையையும் வழங்குகிறது.

''எவர்கள் சக்காத்துக் கொடுக்கின்றார்களோ அவர் களுக்கு அல்லாவுடைய சன்மானம் முத்திக்கொள்ளும். அவர்களை அல்லாஹ் ஆசீர்வதிப்பான். எவர் சக்காத்துக் கொடுக்க மறுக்கின்றாரோ அவரின் செல்வத்தின் ஒரு பகு தியை நான் பெற்றுக்கொள்வேன்'' என்று பெருமானார் (ஸல்) கூறியிருக்கிறார்கள்.

இஸ்லாத்தில் விதிக்கப்பட்டுள்ள சக்காத்து முறை வறுமையை ஒழிக்க இறைவனால் வகுக்கப்பட்ட கட்டாய கடமை என்பதை நாம் உணரவேண்டும். கலீபா உமர்-பின் அப்துல் அஸீஸ் அவர்களுடைய ஆட்சியில் சக்காத்துப் பெற அருகதையுடையவர்களைத் தேடி அலைந்ததாக சரித் திரம் கூறுகிறது. இஃது அவரது ஆட்சியின் சிறப்பைக் காட்டுகின்றதல்லவா? ஆனால் இங்கு இன்று நிலவும் சக்காத்துமுறை - சமூக அமைப்பு வறிய மக்களைக் குறைப் பதற்குப் பதிலாக அதிகரிக்கச்செய்துள்ளதை எவரும் மறுக்க மாட்டார்கள். நிலவும் எமது சக்காத்து முறை ஒருவன் என்றும் ஏழையாக வறியவனாக இருக்கவே வழிவகுத்துள் ளது. அவனும் சந்தோஷமான - சிறந்ததொரு எதிர் காலத்தை அமைத்துக்கொள்ள வழிவகுக்கவில்லை.

பயிர் நிலங்கள் கண்டபடி சிதறுண்டுபோவதையோ, தனிமனிதர்களிடம் அவை குவிந்துவிடுவதையோ இஸ்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கவில்லை. அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள வழியின்றி ஒரு வர்க்கம் பட்டினியோடு போராடும் அதேவேளையில். இன்னொரு வர்க்கம் தமது பத்தாவது பரம்பரையினருக்காகப் பொருளை — பணத்தைக் குவித்து பூட்டின்மேல் பூட்டுப்போட்டு வைப்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் யாருக்கும் சலுகை காட்டாது நிலச்சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். தரிசாகக் கிடக்கும் நிலம் அனைத்தையும் அரசுடைமையாக்கினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் பிளால் (ரலி) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த நிலங்கள் பயிர் செய்யப்படாமலிருப்பதை அறிந்த உமர் (ரலி) அவர்கள் அந்நிலங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் பிளால் (ரலி) அவர்கள் பலவாறு வாதாடியும் பயன் கிடைக்கவில்லை.

''வரண்ட பூமிக்கு உயிர் கொடுப்பவன் அதாவது தரிசாகக் கிடக்கும் நிலத்தைப் பயிரிட்டுப் பசுமையாக்குபவன் அந்நிலத்தின்மீது உரிமை பெறுகிறான்'' என்று எம் பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்திருக்கிறார்கள். எனவே பயிரிடாமல் நிலத்தைத் தரிசாகப் போட்டிருப்பவருக்கு அதில் உரிமையில்லை. ஆகவே அந்நிலம் அரசாங்கத்தின் உடைமையாகிவிட்டது'' என்று ஆணை பிறப்பித்து ஹஸ்ரத் பிளால் (ரலி) அவர்களின் நிலங்களை கலீபா உமர் (ரலி) அவர்கள் அரசாங்கவுடைமையாக்கினார்கள். இன்றைய நிலச்சுவான்தார்களுக்கு — முதலாளித்துவவாதிகளுக்கு இஃது ஒரு பாடமாக அமையவேண்டும்.

பணம் குவிப்பதையே குறிக்கோளாகக்கொண்டு வாழ்வதைக் குற்றமாகக் கருதுகின்றது இஸ்லாம். இதே இஸ்லாம் மனிதன் தன் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு உழைப்பதைக் கடமையாக்கியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபாரம் :

"அளவைப் பூரணமாக அளந்து கொடுங்கள் (ஏமாற்றிப் பிறரை) நஷ்டப்படுத்துவோராக இருக்கவேண்டாம்"
(26 : 181)

* * *

வியாபாரத்தில் பொய்யுரைத்தல், ஏமாற்றுதல், பதுக்குதல், கலப்படம், கொள்ளை லாபமடித்தல், மோசடி செய்தல், சுரண்டல் போன்றவற்றை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இவற்றை இஸ்லாம் கண்டிக்கிறது.

"அளவிலே மோசம் செய்பவர்களுக்கு மகத்தான கேடுண்டாகும். அவர்கள் பிறரிடம் அளந்து வாங்கினுல் நிறைய அளந்து வாங்கிக்கொள்கின்றனர். ஆனுல் மற்றவர்களுக்கு அளந்து கொடுத்தாலோ குறைத்து விடுகின்றனர். நிச்சயமாக அவர்கள் மகத்தான ஒரு நாளில் எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?"
(83 : 1-6).

இத்திருவசனங்களில் அளவில் மோசடி செய்பவர்களை இறைவன் கண்டிப்பதைக் காண்கிறோம். இவர்களுக்கு என்ன தண்டனை உண்டு என்பதையும் அல்லாஹ் கூறி வைத்து விட்டான். அளவில் நேர்மையாக இருக்கவேண்டும் என்பதை மீண்டும் அல்லாஹ் வற்புறுத்துகுருன்.

"அளவைப் பூரணமாக அளந்து கொடுங்கள் (ஏமாற்றிப் பிறரை நஷ்டப்படுத்துவோராக இராதீர்கள் நல்ல தராசுகொண்டு நிறுத்துக் கொடுங்கள். மக்களுக்குச் சேர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பொருட்களைக் குறைக்காதீர்கள்'' (26:181-3). இஃது ஆண்டவன் கட்டளை. அவன் கட்டளைப்படி நடக்கிறோமா? 'சுரண்டி வாழாதே' என்பதை மேற்கண்ட திருவசனங்கள் வலியுறுத்துகின்றன. மனிதன் நேர்மையான முறையில் சம்பாதித்துண்ணுமாறும். கொள்ளைலாபமடித்தவற்றில் வயிற்றை வளர்க்கக்கூடாது என்கிறது இஸ்லாம்.

இன்று பெரும்பாலான வியாபாரிகள் வியாபாரத்தில் பொய்யுரைக்கின்றனர். அப்படிப் பொய் சொல்லி வியாபாரஞ் செய்பவர்களைப்பற்றி எம் பெருமானார் (ஸல்) அவர்கள் ''வணிகர்களில் அல்லாஹ்வுக்கு அஞ்சுபவர்களையும், நேர்மையாளர்களையும், உண்மையாளரையும் தவிர ஏனையோர் எல்லாம் நிச்சயமாக மறுமையில் பெரும் பாவிகளாகவே எழுப்பப்படுவார்கள்'' என்று கூறியிருக்கிறார்கள்.

சில பொருட்களை விற்க இஸ்லாம் தடைவிதிக்கிறது. ''நிச்சயமாக அல்லாஹ் மதுவையும், செத்தவற்றையும், பன்றியையும், சிலைகளையும்கொண்டு வாணிபஞ் செய்வதை ஆகாதவையாக்கிவிட்டான்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

வியாபாரப் பொருட்களைப் பதுக்கி வைப்போரை இஸ்லாம் கண்டிக்கின்றது. விசேஷமாக உணவுப் பொருட்களைப் பதுக்கிவைக்கக் கூடாது. 'உணவுப்பொருட்களைப் பதுக்கி வைப்பவர்கள் மிகவும் கெட்டவர்கள்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவர்கள் நவின்றுள்ளார்கள். ''உணவுப்பொருட்களைப் பதுக்குபவர்களையும், மனிதர்களைக் கொலை செய்பவர்களையும் இறைவன் ஒரே இடத்திலிருந்து (மறுமையில்) எழுப்பி ஒன்றுசேர்ப்பான். மேலும் பேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையிட்டு விலையை உயர்த்துகின்றவனை பெரும்நரக வேதனை யிட்டு அவதிப்படுத்துவது அல்லாஹ்வின் மீது கடமையாகும்'' என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த தாக ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக் கின்றார்கள்.

ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கடை வீதியில் குவிக்கப்பட்டிருந்த தானியக் குவியலின் அருகே சென்றார்கள். அப்பொழுது அவர்கள் தங்களின் கையை அக்குவியலுக்குள் விட்டனர். கையில் ஈரம்படவே ''தானி யத்திற்குரியவரே இதுஎன்ன?'' என்று வினவினார்கள். அதற்கு அவர் 'நாயகமே மழையின் காரணமாக அது நனைந்துவிட் டது' என்றார். அதற்கு அவர்கள் ''மக்களின் கண்களில் படும்படி ஏன் இதனை மேலாக வைக்கக்கூடாது. எவர் மோசம் செய்கின்றாரோ அவர் நம்மில் உள்ளவரல்லர்'' என்று கூறினார்கள். இச்சம்பவம் வியாபாரத்தில் நேர்மையை வற்புறுத்துவதோடு மோசடிசெய்து ஏமாற்றுபவர்களையும் கண்டிக்கிறது. ''தன்னிடமுள்ள ஒரு பொருளின் குறையை அறிந்திருந்தும் அதனை வாங்குவோரிடம் எடுத்துரைக்காது விற்பனை செய்வது எந்த முஸ்லிமுக்கும் ஆகுமானதல்ல'' என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிச் சென் றிருக்கின்றார்கள்.

---

''நீங்கள் மிக்க அளவுகடந்து பொருளை நேசிக்கின் றீர்கள்'' (89:20)

''விசுவாசிகள் (யாவரும்) நிச்சயமாகச் சகோதரர் களே! ஆகவே, உங்கள் சகோதரர்களுக்கிடையில் (ஒழுங் கையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தி) சுமுகமாக இருங் கள். (இதில்) அல்லாஹ்வுக்குப் பயந்து நடவுங்கள். (இதனால்) அவனுடைய கிருபையைப் பெறலாம்''. (49:10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ் ?

''(நபியே!) நீர் எண்ணவேண்டாம்: எவர்கள் தாங்கள் செய்த (அற்பக்) காரியத்தைப்பற்றி மகிழ்ச்சிகொண்டு, தாம் செய்யாத (நன்மையான) காரியங்களைப் பற்றியும் தாம் புகழப்படுவதை விரும்புகின்றார்களோ, அவர்கள் வேதனையிலிருந்து தப்பித்துக்கொள்வார்களென்று. நிச்சயமாக (ஒரு காலமும்) நீர் எண்ணவேண்டாம்! அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையுண்டு'' (3:188).

''எவரேனும் இவ்வுலக வாழ்க்கையையும், அதன் அலங்காரத்தையும் (மாத்திரம்) விரும்பினால், அவர்கள் செயலுக்குரிய பயனை இ(வ்வுலகத்)திலேயே நாம் பூரணமாகக் கொடுத்துவிடுவோம். அதில் அவர்கள் குறைவு செய்யப்படமாட்டார்கள். எனினும் நரக நெருப்பைத் தவிர வேறொன்றுமில்லை; அவர்கள் செய்தவையும் இங்கு அழிந்து விட்டன. அவர்கள் செய்துகொண்டிருப்பவையும் வீணானவையே!'' (11:15-16).

புகழ் என்ற சொல்லுக்குரியவன் இறைவன் மாத்திரமே. புகழென்ற புகழெல்லாம் சர்வசக்தன் ஏகநாயன் அல்லாஹ்வுக்கேயுரியது. மனிதனுக்கு எந்தவிதப் புகழும் இவ்வுலகில் கிடையாது; புகழை விரும்பவோ எதிர்பார்க்கவோ கூடாது. இஃது அல்லாஹ்வுக்கேயுரியது. மேற்கண்ட திருவசனங்களில் மனிதனிடத்தில் இருக்கும் முதலாளித்துவ டாம்பீகச் சிந்தனைகளைப் பொடிப்பொடியாக்கிவிட்டான் அல்லாஹ். புகழுக்காக வாழ்வதை - ஆடம்பரமாக - உல்லாசமாக வாழ்வதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அதேவேளையில் எளிய வாழ்வு வாழுமாறு பணிக்கிறது இஸ்லாம்.

எளிமை என்பது இல்லாமையோ, ஏழ்மையோ, வறுமையோ அல்ல. மனநிறைவான, சந்தோஷமான பகட்டு - ஆடம்பரமற்ற இனிய வாழ்வே எளிய வாழ்வு. ஆடம்பரமற்ற எளிய வாழ்வு வாழுமாறு மனிதனை இஸ்லாம் பணிக்கிறது. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பஞ்சணையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கவுமில்லை; மாடமாளிகையில் உல்லாசமாக வாழவு மில்லை. தன்னை மற்றவர்கள் புகழவேண்டும் என்பதற்காக அவர்கள் எதையுமே செய்யவில்லை. ஆடம்பரவாழ்வை - போலி வரட்டு கௌரவத்திற்காக வாழும் வாழ்வை - மக்களிடம் பெயரையும் புகழையும் பெறுவதற்காக வாழும் வாழ்வை இறைவன் வெறுப்பதையும், அவர்களுக்கு நரக நெருப்புத்தான் உண்டு என்று எச்சரிப்பதையும் மேற்கண்ட திருவசனங்களில் காணலாம்.

''மறுமை நாளில் முதலில் அழைக்கப்படுவோர் குர்ஆனை மனனஞ்செய்தவர்களும், இறைவழியில் உயிர் நீத்தவர்களும், பெரும் செல்வந்தர்களுமாவர். அவர்கள் முறையே 'காரி'(குர்ஆனைத் திறம்பட ஓதுபவர்) என்றும், பெரும் வீரர் என்றும், பெரும் கொடைவள்ளல் என்றும் மற்றவர்களால் புகழப்படுவதற்காக இவற்றைச் செய்தவர்களாவர். இத்தகைய மூவர் தாம் படைப்புகளில் முதன் முதல் நரகத்திற்குச் செல்வார்கள்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் திருவுளமாகியிருக்கிறார்கள், பிறரின் பாராட்டுதலுக்காகச் செய்யப்படும் செயல்களின் முடிபு மேற்கண்ட நபிமொழியில் விவரிக்கப்பட்டுள்ளது.

''(பெருமைகொண்டு) உன் முகத்தை மனிதர்களை விட்டுத் திருப்பிக்கொள்ளாதே! பூமியில் பெருமையடித்துக் கொண்டு நடக்காதே. கர்வங்கொண்டு பெருமையடிப் போரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை'' (31:18).

என்ற திருவசனம் பூமியில் பெருமையடித்துக்கொண்டு- கர்வங்கொண்டு நடப்பவர்களை எச்சரிப்பதைக் காணலாம்.

ஒருசமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் சில தோழர்களுடன் சென்றுகொண்டிருந்தபோது ஒரு ஸஹாபி மாளிகையொன்றைக் கட்டிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொன்னபோது அவர்கள் அதற்குப் பதில்கூறாமல் போய்விட்டார்கள். காரணத்தை விசாரித்தறிந்த அவர் அம்மாளிகையைத் தரை மட்டமாக்கிவிட்டார். இதையறிந்த பெருமானார் (ஸல்) அவர்கள் மிக மகிழ்ந்தார்கள். தனியொரு குடும்பம் வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தற்குப் பெரிய மாளிகை கட்டப்படுவதை - வீண் ஆடம்பரத்திற்காகப் பொருள் விரயஞ் செய்யப்படுவதை இறை தூதர் அவர்கள் வெறுத்துள்ளார்கள் என்பதை இச்சம்பவத்திலிருந்து அறிகிறோம். இஃது எம்மவர்களுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும்.

ஒருசமயம் அறிஞர் பெர்ணட்ஷா அவர்களுக்கு இங்கிலாந்துப் பிரபுக்கள் ஒரு விருந்து போட்டார்கள். அஃது ஒரு பெரிய விருந்து வைபவம். சீமான்களின் விருந்தானதால் அஃது ஆடம்பரமாக அமைந்திருந்தது. அறிஞர் அவர்கள் வீட்டிலிருந்த சாதாரண உடையிலேயே விருந்துக்கு வந்தார்கள், விருந்து மாளிகைக்குள் நுழையவந்த பெர்ணட்ஷா அவர்களைக் காவலாளிகள் பிடித்திழுத்துக் கொண்டுபோய் வெளியே விட்டுவிட்டார்கள். காரணத்தை யுணர்ந்த பெர்ணட்ஷா அவர்கள் திரும்பவும் வீட்டிற்குப் போய் 'டிப்டொப்'பாக சூட்கோட் மாட்டிக்கொண்டு வந்தார்கள். வர்ணிக்க முடியாதளவு வரவேற்பளிக்கப்பட்டது. பிரபுக்கள் புடைசூழ பெரும் ஆரவாரத்தோடு விருந்து மேசைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். அறிஞர் அவர்கள் மற்றவர்களை உட்காரும்படி வேண்டியதன் பின், மேசையிலிருந்த உயர்ந்த உணவு வகைகளைத் தமது கோட் சூட்டைகளில் நிரப்பத் தொடங்கிவிட்டார்கள். மற்றவர்களுக்கு என்னவென்று புரியவில்லை. ஒரே வியப்பு. 'இவருக்கென்ன பைத்தியமா?' என்றும் யோசித்தனர். அறிஞர் அவர்கள் சொன்னார்கள்: ''இஃது உண்மையில் எனக்களிக்கப்பட்ட விருந்தல்ல, இந்த உடைகளுக்களிக்கப்பட்ட விருந்து. அதனாலேயே இவற்றிற்கு உண்ணக்கொடுக்கிறேன். இந்த விருந்து எனக்கென்றால் அல்லவா நான் உண்ணவேண்டும்'' என்று தான் முன்பு சாதாரண உடையில் வந்தபோது நிகழ்ந்ததையும் கூறிவிட்டு வெளியேறிவிட்டார்கள். பெர்ணட்ஷா அவர்களின் இச்செயல் ஒரு பெரும் பாடமல்லவா? அர்த்தமற்ற போலி - வரட்டு கௌரவத்தை - முதலாளித்துவ சிந்தனைகளை வன்மையாகக் கண்டித்தவர் அறிஞர் பெர்ணட்ஷா அவர்கள். ஆடம்பரத்தை - புகழை வெறுத்தவர், எளிமையை விரும்பியவர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களிடை (ஆண்களிலும், பெண்களிலும் மண மாகாது) தனித்தவர்களாய் இருப்பவர்களுக்கு மண முடித்து வையுங்கள்'' (24:32)

* * *

இன்று இலங்கை முஸ்லிம்களை ஆட்டிப்படைக்கும் மிக முக்கியமான பிரச்சினையும், அதிவிரைவில் தீர்க்கப்படவேண் டிய பிரச்சினையும், பயங்கரமான பிரச்சினையும் சீதனம் பிரச் சினையே. இஃது ஒரு சமுதாயப் பிரச்சினை. எம் மத்தியில் வெகு காலத்திற்கு முன்பே புரையோடிவிட்ட ஒரு பயங் கர நோய்.

'தனிப்பட்ட ஒவ்வொருவரும் தாமே சீதனமின்றி மணமுடிக்க முன்வந்தால் இப்பிரச்சினைக்கு இடமிருக்காது' என்று யாராவது கருதினால், அல்லது கொடை வள்ளல்கள் மூலம் இப்பிரச்சினைக்கு விடைகாணலாம் என்று கூறினால், அல்லது 'பைத்துல்மால்' போன்ற பொது நிதியினால் இதற்குத் தீர்வுகாணலாம் என்று அபிப்பிராயப்பட்டால் அது மடமையென்றே கூறவேண்டும். முஸ்லிம் தனவந்தர் களாலோ, கொடைவள்ளல்களாலோ சீதனப் பிரச்சினையை அடியோடு தீர்த்துவைக்க முடியுமா? முடியவே முடியாது. ஒருசில கன்னியர்களை மாத்திரம் அவர்களால் கரைசேர்க்க முடியலாம். ஆனால் முழுச்சமுதாயத்திலுமுள்ள எமது இளம் சகோதரிகளுக்கும் அவர்களால் வாழ்வளிக்க முடி யுமா? நினைத்துப் பார்க்கக்கூட முடியாத காரியம். தனிப் பட்டவர்கள் திருந்துவதன்மூலம் முழுச் சமுதாயமும் திருந்தி விடும்' என்று எதிர்பார்ப்பவர்கள் அந்தத் 'திருந்தும் நாளை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முடியும்வரை எதிர்பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டியதுதான். நடக்கவே நடக்காது. இது கசப்பாக இருக்கலாம். ஆனால் உண்மை!

'சீதனம் எடுக்கவும் கூடாது, கொடுக்கவும்கூடாது' என்ற முழக்கம் இன்று சர்வசாதாரணமாகிவிட்டது. பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், விசேட வெளியீடுகளும் எழுதத் தவறவில்லை. பேச்சாளர்களும் முழங்கத் தவறவில்லை. பல்லாண்டுகளாகச் சொல்லிலும் எழுத்திலும் மாத்திரம் அமைந்துவிட்ட இவர்களின் முழக்கம் எவ்வளவு தூரம் பயனளித்திருக்கிறது என்று பார்த்தால் அது 'பூச்சியம்' என்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஆயிரக்கணக்கான எமது கன்னிப் பெண்களின் இரத்தக் கண்ணீரை இவை துடைத்துவிட்டனவா? இல்லவே இல்லை.

சீதன விடயத்தில் எமது முஸ்லிம் யுவதிகள் இளைஞர்களைச் சாடுவதில் எந்தவிதப் பயனுமில்லை. இப்படிச் சாடுவதன்மூலம் தமது மன வேதனையைக் குறைத்துக்கொண்டதே இதனால் ஏற்பட்ட ஒரே பயன். இன்னொரு பயன் இருக்குமென்றால் அஃது அவர்கள் பத்திரிகைகளின் பக்கங்களை நிறைக்க உதவியமையென்றே கூறவேண்டும்.

ஓர் இளைஞன் சீதனம் ஏன் கேட்கிறான் என்பதைப் பார்ப்போம். இன்று இங்கு நிலவும் சமூக அமைப்பில் மனித வாழ்க்கை ஓர் போராட்டமாகவே இருக்கிறது. நாளுக்குநாள் வாழ்க்கைச்செலவு அதிகரித்துக்கொண்டுபோகிறது. திருப்தியில்லாத ஒரு வாழ்க்கைமுறை நிலவுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. இளைஞர்கள் மத்தியில் விரக்தி மனப்பான்மையும் அமைதியின்மையும் துரிதமாகப் பரவ ஆரம்பித்துவிட்டது. தனது பிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலச் சந்ததிகளின் வாழ்க்கையெல்லாம் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கும்; திருப்தியில்லாத வாழ்க்கைமுறையொன்றுக்குள் தள்ளப்பட்டிருக்கும்; நிலவும் சமூக அமைப்பில் எந்தவிதப் பாதுகாப்புமற்ற இன்றைய இளைஞன், பெண் வீட்டாரிடம் உயிர்நாடியான பணம் (சீதனம்) கேட்பதில் எந்தவிதத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்படிக் கேட்பதற்கு அவனா காரணம்? இருக்கவேமுடியாது.

இஸ்லாத்தில் மிகவும் அவசரமாகச் செய்யவேண்டிய ஐந்து காரியங்கள் உள்ளன, அவை:

(i) பாங்கின் (அதான்) ஒலி கேட்டதும் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுதல்,

(ii) சூரியன் அஸ்தமனமானவுடன் நோன்புதிறத்தல்,

(iii) ஆபத்தில் இருப்போருக்கு உதவுதல்,

(iv) ஒருவர் காலமானால் அவரை முறைப்படி அடக்கஞ்செய்தல்,

(v) ஒரு பெண் பருவமடைந்தால் அவளை முறைப்படி திருமணஞ்செய்துகொடுத்தல்.

இவை ஐந்திலும் முதல் நான்கையும் பெரும்பாலும் எம்மால் செய்யமுடிகிறது. ஆனால் ஐந்தாவதைக் செய்ய முடிவதில்லையே! இஃது ஏன்?

"உங்களிடை (ஆண்களிலும், பெண்களிலும் மணமாகாது) தனித்தவர்களாய் இருப்பவர்களுக்கு மணம் முடித்துவையுங்கள்" (24:32) என்ற ஆண்டவன் கட்டளையை நிறைவேற்ற இன்று நிலவும் சமூகமைப்பில் முடிவதாகத் தெரியவில்லை.

'மணம்புரியுங்கள், பிள்ளைகளைப் பெற்றுச் சந்ததிகளை அதிகரியுங்கள், ஏனென்றால் மறுமையில் என் சமூகத்தினரின் பெருக்கத்தைக்கண்டு நான் பெருமிதமடையக் கூடியவனாய் இருப்பேன். "விழுகட்டியாயினும் சரியே" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த ஆசையை நிலவும் சமூகஅமைப்பில் சரிவர எம்மால் நிறைவேற்றிவைக்க முடிகிறதா? தம் பெண்மக்களைத் திருமணம் முடித்துவைக்கப் பெற்றோர் பிச்சையெடுக்கச் செல்கிறார்கள். இஃது இன்றைய எமது நிலை. மறுக்கமுடியுமா? பெண்மக்களைப் பெற்றவர்கள் படும் துன்பம் சொல்லுந்தரமன்று. நிலவும் சமூகஅமைப்பில் இதற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

A. வறுமை அல்லது பொருளாதார ஏற்றத்தாழ்வு,

B. உறுதியான தொழில் வசதி இல்லாமை.

C. ஒரு முஸ்லிம் குடும்பத்தில் ஒருவர் சம்பாதிக்க ஒன்பதுபேர் உண்ணவேண்டிய நிலை,

D பரம்பரையாக எம்மத்தியில் இருந்துவிட்ட அர்த்தமற்ற - காலத்திற்கொவ்வாத (பொன்னுடைமை, தாலிகட்டுதல், வீண்வேடிக்கை, ஆடம்பரச் சாப்பாடு போன்ற) மூடப் பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும்'

E. ஒரு பெண் பருவமடைந்துவிட்டால் வீட்டின் மூலையில் முடங்கிக் கிடக்கவேண்டிய வெறுக்கத்தக்க சம்பிரதாய முறை,

F. முஸ்லிம் பெண்கள் தொழில்பார்க்கக்கூடாது என்ற தப்பபிப்பிராயம்,

G. போலி கௌரவத்திற்கு அடிமையானதும் முதலாளித்துவ சிந்தனைகளும்,

H. மாற்றங்களை விரும்பாத எமது பிடிவாதப்போக்கு,

I. இன்று நிலவுஞ் சமூகஅமைப்பு.

இப்படிப் பலவற்றைக் கூறலாம். இவைதான் இன்று ஆயிரக்கணக்கில் தமது எதிர்காலத்தைப்பற்றி எண்ணியெண்ணி மூலையிலே முடங்கிக்கிடக்கும் எமது சகோதரிகளின் இரத்தக்கண்ணீருக்குரிய காரணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமது நாட்டில் முஸ்லிம்களுக்காகச் சில பத்திரிகைகள் இருக்கத்தான் செய்கின்றன. எமது இப்பத்திரிகைகள் சமூகப் பொருளாதார அரசியலை ஒதுக்கிவிட்டு ஆத்மீகத்தைப்பற்றியும், இஸ்லாத்தின் சிறப்பியல் புகளையும் பழம்பெருமையையும் மாத்திரம் எழுதிக்கொண்டு — விளாசிக்கொண்டிருந்தால் உருப்படியான பயன் எதையும் எதிர்பார்த்துவிடமுடியாது. எம்மில் சில எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். அவர்கள் சதா மறுவுலகில் சஞ்சரிப்பவர்கள். அவர்களும் ''இவ்வுலகில் உனக்குள்ள பங்கை மறந்துவிடாதே'' (28:77) என்ற இறை கட்டளையை ஏற்று இவ்வுலகிற்கு வரவேண்டும். சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகள்பற்றியும் எழுதவேண்டும்.

இன்று எமது சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு பாரதூரமான அளவுக்கு வந்துவிட்டதை எவராலும் மறுக்கமுடியாது. இந்த நீண்ட இடைவெளி பயங்கரமானது! இந்த இடைவெளி இருக்கும்வரை – இன்று நிலவும் சமூகஅமைப்பு இருக்கும்வரை சீதனப்பிரச்சினை இருந்துகொண்டேயிருக்கும். கசப்பாக இருந்தாலும் இஃது உண்மை! ஏற்றுக்கொள்ளவேண்டியது. இவை மாற்றப்படும்வரை அல்லாஹ்வின் கட்டளையையோ, எம்பெருமானார் (ஸல்) அவர்களின் விருப்பத்தையோ எம்மால் சரிவர நிறைவேற்றிவைக்கமுடியாது.

இருந்தாலும், அதுவரையிலாவது எமது இளம் சகோதரர்கள், கல்யாணமாகாத இளம் சகோதரிகளின் துன்பகரமான அவலநிலையைக் கருத்தில்கொண்டவர்களாக சீதனத்தை ஒரு பிரச்சினையாகக் கருதாமல் அவர்களின் இரத்தக்கண்ணீரைத் துடைத்து அவர்களுக்கு வாழ்வளிக்க மனிதாபிமானத்துடன் முன்வருமாறு சகோதர பாச உணர்வில் பணிவாக தாள்பணிந்து வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தடை ?

''மணம் புரியுங்கள்; பிள்ளைகளைப் பெற்றுச் சந்ததிகளை விருத்தியாக்குங்கள். ஏனென்றால் மறுமையில் என் சமூகத்தினரின் பெருக்கத்தைக் கண்டு பெருமையடைவேன். விழுகட்டியாயினும் சரியே''.

(நபிமொழி)

* * *

(i) ''உணவளிக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக்கொள்ளாத யாதொரு சீவராசியும் பூமியில் இல்லை.'' (11:6)

(ii) ''உங்களுக்கும் நீங்கள் ஆகாரம் கொடு(த்து வளர்)க்காத (ஆகாயத்திலும் பூமியிலும் வசிக்கக்கூடிய) சீவராசிகளுக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை நாமே அதில் அமைத்தோம்''. (15:20)

(iii) ''நாமே இரவை ஒரு போர்வையாக்கினோம், இன்னும் நாமே பகல் பொழுதை (நீங்கள்) ஜீவனோபாய(த்தைத் தேடிக்கொள்ளும் நேர)மாகவும் ஆக்கினோம்'' (78:10, 11).

மேற்கண்ட மூன்று திருவசனங்களின் முதலாவது திருவசனத்தில் அல்லாஹ்வின் கடாட்சம், இரட்சிப்புத்தன்மை புலனாகிறது. உணவுக்காக மனிதன் தன்னையோ தன் சந்ததிகளையோ அழித்துக்கொள்ளத் தேவையில்லை என்ற தைரியத்தை — பாதுகாப்புறுதியை இறைவன் மனிதனுக்களிக்கிறான். அந்தப் பாதுகாப்புறுதியை நம்பும் அதேவேளையில் மனிதன் இயங்காமல் - உழைக்காமல் சும்மா இருந்துவிட முடியாது. ஏனென்றால் இரண்டாவது திருவசனத்தில் மனிதனின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை இறைவன் அமைத்திருப்பதாகக் கூறுவதோடு, மூன்றும் திருவசனத்தில் அந்தப் பொருட்களைக்கொண்டு தனது ஜீவனோபாயத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக்கொள்ளுமாறு கட்டளையிடுகிறான் சர்வசக்தன். என்ன அழகாக மனிதனுக்கு அறிவு புகட்டுகிறான் அவன். இயங்கி உழைக்குமாறு இதமாக மனிதனை இறைவன் பணிக்கும் பாணியே அலாதி!

''உங்களுக்கும் நீங்கள் ஆகாரம் கொடு(த்துவளர்)க்காத (ஆகாயத்திலும் பூமியிலும் வசிக்கக்கூடிய) சீவராசிகளுக்கும் வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை நாமே அதில் அமைத்தோம்'' (15:20).

உண்மையிலேயே வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை இவ்வுலகில் மனிதன் படைக்கவில்லை. அவற்றைப் படைத்தவன் இறைவனே. ஆனால் அவற்றை விருத்தி செய்துகொள்ளவேண்டியது மனிதனின் வேலை. அஃது அவன் கடமை. இக்கடமையைச் சரிவரச் செய்யாமல் சனப்பெருக்கத்திற்கேற்ப உணவுப்பெருக்கும் அமையவில்லை என்று பயப்படுவதில் அர்த்தமில்லை. இந்தப் பயமும், முதலாளிவர்க்கத்தின் வாழ்க்கை வசதிகள் குறைந்துவிடுமே என்ற அச்சமும் தாம் கருத்தடைப்பிரசாரத்தின் மூலகாரணங்கள். கருத்தடையை ஊக்குவிப்பவர்களும், அதனை வரவேற்பவர்களும் சனப்பெருக்கத்தைக் கண்டு பயப்படுபவர்களும், 'பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் உண்டுதீர்க்கும் ஒரு வாயுடன் மாத்திரமல்ல, உழைக்கும் இரு கரங்களுடனும்தான் பிறக்கிறது' என்ற உண்மையைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

உற்பத்திக் காரணிகளான நிலம், மூலதனம், மனிதனின் உழைப்பு என்ற மூன்றிலும் மனிதனின் உழைப்புச் சக்தியை மறந்து, மனிதனை உணவை உண்டு அழிக்கும் ஒரு வெறும் இயந்திரமாக மாத்திரம் கருதுவது முறையல்ல. மனித வளம் பெருகும்போதுதான் உழைப்புச்சக்தி அதிகரிக்கிறது. உழைப்பினால்தான் உற்பத்தி அதிகரிக்கிறது. வேறு விதமாகச் சொல்லப்போனால் உற்பத்திக்கு உழைப்பு வேண்டும், உழைப்புக்கு மனிதன்வேண்டும். இதுதான் நியதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகிலிருக்கும் உணவு உற்பத்தி இதற்குமுன் எந்த நூற்றாண்டிலும் இருந்ததில்லை. இதற்குக் காரணம் சனப்பெருக்கத்திற்கேற்ப உணவும் அதிகரித்துவந்துள்ளதே. மேலே நாம் கண்ட திருவசனத்தில் உள்ளவாறு அல்லாஹ் மனிதனின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை இவ்வுலகில் அமைத்துவைத்திருக்கும்போது, அல்லாஹ் கருத்தடையை ஏற்றுக்கொள்ளமாட்டான். அவன் படைத்த 'வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை'' விருத்திசெய்து கொள்ளவேண்டியதே மனிதன் செய்யவேண்டியது. உண்மை இப்படியிருக்க, சனப்பெருக்கத்திற்கேற்ப உணவு அதிகரிக்காது என்று ஒரு வர்க்கம் முதலைக்கண்ணீர் வடிப்பதில் எந்தவித உண்மையோ அர்த்தமோயில்லை. இவர்களுடைய பயத்திற்கு மூலகாரணம் சனப்பெருக்கம் அதிகரித்தால் தமது வாழ்க்கை வசதி குறைந்துவிடுமே என்பதுதான். இதுதான் உண்மை. உண்மை இப்படியிருக்க, எமது உயிரான ஈழமாதாவுக்குக் கருச்சிதைவு செய்யலாமா? அந்த வேதனையில் அவள் கண்ணீர் வடிக்கமாட்டாளா? அவள் விடும் கண்ணீரைக்கண்டு அவள் பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருப்பார்களா?

இஸ்லாம் என்றுமே கருத்தடையை அனுமதித்ததில்லை. ''மணம் புரியுங்கள்; பிள்ளைகளைப்பெற்றுச் சந்ததிகளை அதிகரியுங்கள். ஏனென்றால் என் சமூகத்தினரின் பெருக்கத்தைக்கண்டு நான் மறுமையில் பெருமையடைவேன். விழுகட்டியாயிருந்தாலும் சரியே'' என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். எம்பெருமானாரின் விருப்பத்திற்கு மாறுசெய்வது முறையல்ல. எந்த ஒரு உண்மை முஸ்லிமும் கருத்தடையை அனுமதிக்கமாட்டான்.

''(மனிதர்களே!) நீங்கள் தரித்திரத்திற்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலைசெய்துவிடாதீர்கள்'' (17:31)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இறைவனின் எச்சரிக்கைக் கட்டளையை நாம் இங்கு கவனிக்கவேண்டும். இன்னும் எவ்வளவோ நிலம் தரிசாகக் கிடக்கும்போது, இன்னும் எத்தனையோ கோடி மக்களுக்குத் தேவையான உணவு ஆழ்கடலில் இருக்கிறது என்று ஆராய்ச்சிகள் சொல்லும்போது கருத்தடை அவசியந்தானு? மனித முயற்சியையும், உழைப்புச்சக்தியையும் சிறந்தமுறையில் பயன்படுத்தினுல் கருத்தடைக்கு அவசியமிருக்காது. தொழில் அற்றோர் என்ற பட்டாளமும் இருக்காது, பட்டினிச் சாவுகளும் நிகழாது.

மக்கள் சீனக்குடியரசின் தற்போதைய ஐக்கிய (U.N.O.) கூட்டுப்பிரதிநிதி திரு ஹூலி-சங் அவர்கள் அண்மையில் ஐக்கிய நாடுகளின் சனத்தொகைக் கமிஷன் தொடர்பான மூன்ருவது விசேஷ மகாநாட்டில் ஆற்றிய அரும் உரை இங்கு கவனிக்கத்தக்கது.

"ஒரு நாட்டின் சனத்தொகைப் பிரச்சினை அந்நாட்டின் சமூக அமைப்பைப் பொறுத்தேயுள்ளது. தற்போது பல நாடுகள் சனத்தொகைப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. சனத்தொகைப் பிரச்சினையை ஆராயும்போது வேலையில்லாப் பிரச்சினை, பஞ்சம், கூடுதலான பிறப்பு விகிதம் ஆகியவற்றைப் பல நாடுகள் எதிர்நோக்குகின்றன. அரசியல், பொருளாதார நிலையைவைத்தே இவை ஆராயப் படவேண்டும். ஆதிபத்தியக் கொள்கை, ஆக்கிரமிப்பு முதலியனவே சில அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சனத்தொகைப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணங்களாக உள்ளன. இவை ஏகாதிபத்தியத்தினுல் ஏற்படுத்தப்பட்டவை. இன்றுள்ள வறிய நாடுகள் ஆரம்பத்திலேயே வறியனவாக இருக்கவில்லை. அல்லது கூடுதலான சனத்தொகை வறுமைக்குக் காரணமாக இருக்கவில்லை. சுரண்டலே அவற்றை வறியநிலைக்குத்தள்ளியது" (தினகரன் 17.8.1974).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உரையில் பல உண்மைகள் பொதிந்திருப்பதைக் காணுகிறோம். முதலாளித்துவ சமூகமைப்புள்ள நாடுகளில் அதிகரிக்கும் சனத்தொகை ஒரு பிரச்சினையாக இருக்கும். அதேவேளையில் சமதர்ம அமைப்புள்ள நாடுகளில் சனத்தொகையை மாபெரும் சக்தியாக - நாட்டின் சிறந்தவொரு வளமாகக் கருதப்படுவதை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது.

---

★ ★ ★

''நிச்சயமாக (உங்கள் இறைவனாகிய) நாம், (இந்தப் பூமிக்குச் சமீபமாகத்) தாழ்வாகவுள்ள வானத்தைச் சுடரிடும் நட்சத்திரங்களைக்கொண்டு அழகுபடுத்தி வைத்துள்ளோம்'' (37:6).

❋ ★ ❋

''வானங்களிலும், பூமியிலுமுள்ள யாவையுமே அவன் தன்னுடைய அருளால் உங்களு(டைய நன்மை)க்கு (உழைக்குப்படி)க் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றான். சிந்தித்து ஆராயும் ஜனங்களுக்கு, நிச்சயமாக இதில் (பல) படிப்பினைகள் இருக்கின்றன'' (45:13).

☪ ☪ ☪

''மனு, ஜின் கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள் பூமியின் எல்லையைக் கடந்து சென்றுவிட உங்களால் கூடுமாயின் அவ்வாறு சென்றுவிடுங்கள். ஆயினும் அவைகளை ஆட்சி புரியக்கூடிய (மிகப்பெரும்) ஆற்றலுடனன்றி, நீங்கள் செல்லமுடியாது'' (55:33).

◡ ◡ ◡

'' 'நாம் எதைச் செய்வது?' என்று அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். தேவைக்கு மிஞ்சியதை என்று கூறுவீராக.'' (2 : 219).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தலைவர் ?

''நபியே! உமக்கு முன்னர் நாம் அனுப்பிவைத்த தூதர்களெல்லாம் நிச்சயமாக (உம்மைப்போல்) உண வருந்துபவர்களாகவும், சந்தைக்குச் செல்பவர்களாக வுமே இருந்தார்கள்'' *(25:20)*

* * *

ஒரு மக்கள் தலைவர் எப்படியிருக்க வேண்டும் என்று இறைவன் என்ன அழகாகக் கூறியிருக்கிறன்? ஒரு நாட்டின் தலைவர்—மக்கள் தலைவர் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை இத் திரு வசனத்திலிருந்து உணர்ந்து கொள்ளலாம். இன்று ஒரு நாட்டின் தலைவர் தாமே தமக் குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொள்ள சாதா ரண மக்களைப் போல் சந்தைக்குச் சென்ருல், சாதாரண மக்களோடு அந்யோன்யமாகப் பழகினுல் அவரை உளமா ரப் புகழ்கிறேமல்லவா? 'புரட்சித் தலைவர்' என்று பட்டஞ் சூட்டிப் பாராட்டுகிறேம். ஆனுல், ஆயிரத்து நானூறு வரு டங்களுக்கு முன்னே இடப்பட்ட ஆண்டவன் கட்டளையல் லவா இது. இன்று எத்தனை நாட்டுத் தலைவர்கள் சாதா ரண பிரஜைகளோடு அந்யோன்யமாகப் பழகி ஆடம்பர மற்ற எளிய வாழ்வு வாழ்கிருர்கள்? இவர்கள் வீட்டிற்குள் இருக்கும்போதும், வெளியே செல்லும்போதும் எத்துணைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்? இராணுவ வீரர்களும் போலிசாரும் இவர்களின் பின்னுலும் முன்னுலும் சுற்ற வேண்டியிருக்கிறது. இத்தகைய பாதுகாப்பை விரும்புபவர் கள் எப்படி மக்கள் தலைவர்களாக இருக்க முடியும்? தலை மைப் பதவி வந்ததும் அதிகார வெறியும், ஆணவமும், ஆடம்பரமும் தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டும் என்ற அபிலாசையும் வந்துவிடுகின்றன. இதை இஸ்லாம் வெறுக் கிறது; கண்டிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் கடமைகள் இருக்கத்தான் செய்கின்றன. மக்கள், தலைவருக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். கட்டுப்பாடு இல்லாவிட்டால் ஒழுங்கும், அமைதியும் இருக்காது.

''விசுவாசிகளே, நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடவுங்கள். (அவ்வாறே அல்லாஹ்வுடைய) தூதருக்கும், உங்கள் அதிபருக்கும் வழிபட்டு நடவுங்கள்'' (4:59) என்று கட்டளையிடுகிறான் இறைவன். இங்கே அதிபர் என்பது மக்களை நிர்வகிக்கக்கூடிய ஆட்சித் தலைவர் என்பதை நாம் கருத்தில்கொள்ளவேண்டும். ஆட்சித் தலைவரின் கட்டளையை ஏற்று அதன்படி நடப்பது மக்களின் கடமையாகும். ஆனால் பாவமான-நன்மை பயக்காத கட்டளைகளை ஏற்று நடக்கவேண்டும் என்பது கருத்தல்ல.

''ஒரு தலைவர் தங்களுக்கு உகந்தவராக இருப்பினும் சரி, தங்களுக்குத் திருப்தியற்றவராக இருப்பினும் சரி அத் தலைவரின் கட்டளைக்குச் செவிசாய்த்து அதன்படி நடப்பது—செயலாற்றுவது முஸ்லிம்களது கடமையாகும். பாவமான கட்டளையை அவர் இடாதவரை! பாவமான கட்டளையை இடின், அதற்குச் செவி சாய்ப்பதுவும், அதன்படி செயலாற்றுவதுவும் முஸ்லிம்களது கடமையல்ல'' என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். தலைவரின் கட்டளை நீதி, நேர்மை, மனசாட்சிக்கு விரோதமாக இருந்தால்-தீமை பயப்பதாக இருந்தால் மக்கள் அதற்குத் தலைசாய்க்கத் தேவையில்லை என்பது எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வாக்கிலிருந்து தெளிவாகிறது.

ஹஸ்ரத் அபூமர்யமல் அஜ்தீ (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். ''நான் முஆவியா (ரலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் சென்றேன். அப்பொழுது அவர்கள் 'இன்னுறின் தந்தையே! தங்கள் வரவு நல்வரவாகுக! எதன் நிமித்தம் தாங்கள் இங்கு எழுந்தருளுனீர்கள்?' என்று வினவினூர். அதற்கு நான் 'ஒரு ஹதீஸ் இருக்கிறது. அதனை நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்றேன். (அது யாதெனில்) 'எவரை அல்லாஹ் முஸ்லிம்களின் அலுவல்களுக்காகத் தலைவராக ஏற்படுத்தியிருந்தும், அவர் தேவையுள்ளவர்களின் தேவையையும், அவர்களுடைய அலுவல்களையும் நிறைவேற்றுமல் மறைந்து விடுகின்ருரோ, அவருடைய தேவையையும், அலுவல்களையும் விட்டும் அல்லாஹ் மறுமையில் மறைந்து இருந்து விடுகிருன்' என்று அவர்கள் கூறியதை நான் செவியுற்றிருக்கிறேன்' என்று கூறினேன். எனவே அவர்கள் மக்களின் தேவைகளைத் (தெரிந்து அவற்றை) நிறைவேற்றுவதற்காக ஒருவரை நியமித்தார்.

இதிலிருந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே தலைவர்கள் நியமிக்கப்படுகிருர்கள் என்பது தெளிவாகின்றதல்லவா? மக்களின் தேவைகளைச் சரிவர நிறைவேற்ருதவர்கள் மக்கள் தலைவராக இருக்க முடியாது.

''மறுமைநாளில் அல்லாஹ்வுக்கு மனிதர்களில் மிகவும் உவப்பானவரும் அவனருகே அமர்ந்திருப்பவரும் எவரெனில், நீதமான தலைவராவார். அன்றி, மறுமைநாளில் அல்லாஹ்வுக்கு மனிதர்களில் மிகக் கோபமானவரும், அவனை விட்டு வெகு தொலைவில் அமர்ந்திருப்பவரும் எவரெனில் அநியாயஞ் செய்யும் தலைவராவார்'' என்று எம்பெருமானுர் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். தமது அதிகாரத்தை தீய வழியில் பயன்படுத்தி மக்களுக்கு அநியாயம், அக்கிரமம் செய்யும் தலைவர்களை இஸ்லாம் கண்டிக்கிறது.

தலைமையென்பது நம்பிக்கையும், கடமையும், கட்டுப்பாடும், பொறுப்பும் வாய்ந்த ஒரு பதவி. ஹஸ்ரத் அபூசர் (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்ருர்கள். ''நாயகமே! தாங்கள் என்னை எதற்கும் நியமிப்பதில்லையே' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வினவினேன். அப்போது அவர்கள் என் தோளில் தங்களின் கையால் ஒரு தட்டு தட்டிய பின் 'அபூசர்ரே! நிச்சயமாக நீர் ஒரு பலஹீனமானவர். இஃது ஒரு நம்பிக்கையான வேலையாகும். அன்றி மறுமை நாளில் இதனால் இழிவையும், துன்பத்தையும், அடைய நேரும். ஆனால் அதன் கடமையைச் சரிவர நிறைவேற்றியும், அதுபற்றிய எல்லாப் பொறுப்புகளையும் செய்தும் இருப்பவர்களையும் தவிர்த்து' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒரு சமயம் நாயகத் தோழர் ஒருவர் எம் பெருமானார் (ஸல்) அவர்களிடம் 'நாயகமே! அல்லாஹ் தங்களுக்களித்த நாடுகளில் ஏதாவதொன்றில் என்னை அதிகாரியாக நியமித்து விடுங்கள்' என்று வேண்டினார்கள். அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'அல்லாஹ்வின் மீது ஆணையாக, நிச்சயமாக நாம் இந்த வேலையில் அதை வேண்டுபவரையும், அதில் பேராசை கொண்டவரையும் நியமிக்கமாட்டோம்' என்று கூறிவிட்டார்கள். இதிலிருந்து, அதிகாரம்-பதவி என்பவை கேட்டுப்போகக் கூடாதவை என்பதுவும், தானே தேடிவர வேண்டியவை என்பதுவும் விரும்புபவர்களுக்கு அவை கொடுக்கப்படக்கூடாதவை என்பதுவும், தகுதி திறமையுள்ளவர்களுக்கே வழங்கப்பட வேண்டியவை என்பதுவும் தெளிவாகிறது. ஆனால் இன்றோ நிலைமை வேறு. சலுகை-செல்வாக்கு ஆகியவற்றிற்கு இஸ்லாத்தில் இடமில்லை.

ஒரு சமூகத்தின் முழுப்பொறுப்பும் அதன் தலைவரை மாத்திரம் சார்ந்ததன்று. சமூகத்தில் வாழும் அத்தனைப் பேரும் பொறுப்புகள் உடையவர்களே. ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புகளையுணர்ந்து நடக்காவிட்டால் அச்சமூகம் சிறப்பாக அமையாது. நிர்வாகப் பொறுப்பைப் பற்றி எம் பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு விளக்கியிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் அனைவரும் அதிகாரிகளே! மேலும் நீங்கள் அனைவரும் உங்களின் (கீழுள்ள) பிரஜைகள் பற்றிக் கேட்கப்படுவீர்கள். அதுவே (ஒரு வீட்டின்) தலைவர் அவ் வீட்டின் அதிகாரியாவார். அவருடைய வீட்டைப் பற்றி அவரிடம் கேட்கப்படும். அன்றி மனைவியும் தன் கணவரின் இல்லத்திற்கு அதிகாரியாவாள். அவள் தன் மக்களைப் பற்றிக் கேட்கப்படுவாள். மேலும் ஊழியனும் தன் எஜமானனின் பொருள்களுக்கு அதிகாரியாவான். அவன் (தன்னுடைய) பிரஜைக(ளான பொருள்க)ளைப் பற்றிக் கேட்கப்படுவான்''

இக்கூற்றிலிருந்து சமூகத்தில் ஒவ்வொருவருடையவும் பொறுப்புகளைப்பற்றி விளங்கிக்கொள்ளலாம். பொறுப்பற்றவகையில் மக்கள் நடந்துகொண்டால் எந்தச் சமூகமும் உருப்படாது.

★ ★ ★

''ஆதமுடைய சந்ததியை நிச்சயமாக நாம் கண்ணியப்படுத்தினோம். தரையில் (வாகனங்கள் மீதும்) கடலில் (கப்பல்கள் மீதும்) நாம்தாம் அவர்களைச் சுமந்து செல்(லும்படி செய்)கிறோம். நல்ல ஆகாரங்களையும் நாமே அவர்களுக்கு அளிக்கிறோம். நாம் சிருஷ்டித்த (மற்ற சீவராசிகளில்) அநேகவற்றின் மீது (பொதுவாக 'நாம்' அவர்களை மிகமிக மேன்மையாக்கினோம்'' (17 : 70).

''எவர்கள் விசுவாசங்கொண்டு நற்கருமங்களைச் செய்கின்றார்களோ, அவர்களை நிச்சயமாக நாம் நல்லோருடன் சேர்த்துவிடுவோம்'' (29 : 9).

''(மனிதர்கள்) நல்லுணர்ச்சி பெறும்பொருட்டே இந்தக் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கி இருக்கின்றோம். ஆகவே (இதனைக்கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் எவரும் உண்டா?'' (54 : 17).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தம் :

"பலஹீனமான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும், சிறு குழந்தைகளுக்காகவும், (இவர்களை இரட்சிப்பதற்காக) அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் யுத்தம் புரியாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது?"

(4 : 75)

முஸ்லிம்கள் கோழையர்களாக, பயந்தாங் கொள்ளிகளாக, வீரம் மானம் அற்றவர்களாக வாழ்வதை இறைவன் விரும்பவில்லை. அவர்கள் சமூக உணர்ச்சியுள்ளவர்களாக – வீரம் மிக்கவர்களாக – தன்மானம் உள்ளவர்களாக – பொது நலம் விரும்பிகளாக இருக்க வேண்டும் என்றே அல்லாஹ் விரும்புகிறான். அநீதிக்குத் தலை சாய்க்கக் கூடாது என்கிறது இஸ்லாம். தேவைப்பட்டபோது அநீதியை ஒழித்துக்கட்ட வீரத்தோடு யுத்தம் செய்ய வேண்டும் என்கிறது இஸ்லாம்.

அல்லாஹ் கேட்கிறான் :

"பலவீனமான ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும், சிறு குழந்தைகளுக்காகவும், (இவர்களை இரட்சிப்பதற்காக) அல்லாஹ்வுடைய பாதையில் நீங்கள் யுத்தம் புரியாதிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது?"

(4 : 75)

இறைவன் இப்படிக் கேட்பது யாரிடம்? இளைஞர்களிடமே! ஒரு சமூகத்தில் பலர் – வீரம் மிக்க ஒரு குழாம் இருந்தால் அஃது இளைஞர்கள் குழாமே! பலவீனமான ஆண்களையும் பெண்களையும், குழந்தைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒரு சமூகத்தில் இளைஞர்களிடமே உள்ளது என்பதை ஏக நாயன் – சர்வசக்தன் அறிவித்துள்ளதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். இத்திருவசனம், இளைஞர்களின் இரும்புக் கரங்களில் தாம் சமூகம் தங்கியுள்ளது என்பதையும், இளைஞர்களின் பொறுப்புக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்துகின்றதல்லவா? மேற்கண்ட திருவசனத்தைப் படித்துணரக் கூடியவனுக்குப் பெரும் படிப்பினையிருந்து கொண்டிருக்கிறது. அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் செய்யுங்கள் என்கிறான் அல்லாஹ். "(விசுவாசிகளே) நீங்கள் அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் புரியுங்கள்" (2:244) என்று இன்னொரு இடத்தில் இறைவன் குறிப்பிடுகிறான்.

எது அல்லாஹ்வுடைய பாதை? எமது உடல், பொருள் உயிர் அத்தனையையும் இறைவனது படைப்புகளின் நன்மைக்காக செலவு செய்வதே அல்லாஹ்வுடைய பாதை. நாட்டிற்கு நன்மை பயக்கக் கூடிய - மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய - மார்க்கத்திற்கு நன்மை பயக்கக் கூடிய காரியங்கள் யாவும் - சத்தியம், நீதி, நேர்மைக்குட்பட்ட காரியங்கள் யாவும் அல்லாஹ்வுடைய பாதையே! எல்லாரும் என்றும் எல்லாம் பெற்று சந்தோஷமாக - சிறப்பாக வாழவேண்டும் என்பதற்காக - நியாயத்திற்காகத் தியாக சிந்தையோடு போராடுவதும் அல்லாஹ்வுடைய பாதையே!

"விசுவாசிகளே! நீங்கள் (யுத்தத்திற்குச் சென்றால் தற்காப்பிற்குரிய) ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு அணியணியாகச் செல்லுங்கள்" (4 : 71)

இத்திருவசனத்தில் எப்படி யுத்தம் செய்ய வேண்டும் என்பது விளக்கப்படுகிறது. நிராயுதபாணி யுத்தம் செய்யக் கூடாது; தக்க ஆயுதங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்று இறைவன் பணிக்கிறான்.

யுத்தத்திற்கு வராது சிலர் தம்முயிருக்குப் பயந்து பின் தங்கிவிடுவதுமுண்டு. இத்தகையவர்களைப்பற்றி இறைவன் கூறுகிறான்.

"(யுத்தத்திற்கு வராது) பின் தங்கிவிடக் கூடியவர்களும் நிச்சயமாகச் சிலர் உங்களில் இருக்கிறார்கள். (அவர்கள் நயவஞ்சகர்களே! ஏனெனில் யுத்தத்திற்குச் சென்ற) உங்களுக்கு யாதொரு கஷ்டம் ஏற்பட்டாலோ அ(வர்களில் ஒரு)வன் 'நான் அவர்களுடன் (அங்கு) வராமாலிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் என் மீது புரிந்த அருள்தான்' என்கிறான். அல்லாஹ்வுடைய அருள் உங்களுக்குக் கிடைத்தாலோ 'நானும் அவர்களுடன் இருந்திருக்க வேண்டாமா? அவ்வாறிருந்தால் பெரும் பாக்கியத்தை நானும் அடைந்திருப்பேனே!' என்று உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் எத்தகைய நட்பும் இல்லாமலிருந்ததைப் போல் அவர்கள் கூறுகின்றனர்.''

(4 : 72, 73)

அல்லாஹ்வுக்குப் பயப்படாமல், மனிதர்களுக்கும், தம் முயிருக்கும் பயந்து யுத்தம்புரியப் பின்னிற்கும் சுய நலம் மிக்க நயவஞ்சகர்களை இறைவன் நன்கு புலப்படுத்தியிருக்கிறான். இத்தகையவர்களைப் பார்த்துத் திரும்பவும் அல்லாஹ் கூறுகிறான்.

''நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களையடைந்தே தீரும். மிகப் பலமான உயர்ந்த கோட்டை கொத்தளங்களின் மீது நீங்கள் இருந்த போதிலும் சரியே.''

(4 : 78)

மரணம் எல்லாவுயிர்களுக்கும் பொது; தவிர்க்க முடியாதது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறான் இத்திருவசனத்தில். மனிதர்கள் மரணத்திற்குப் பயப்படுவதை இறைவன் கண்டிக்கிறான். மரணத்திற்குப் பயந்தவர்களுக்கு எத்தகைய யுத்தமும் செய்யமுடியாது. பயம் அற்றவர்களாக - வீரம் மிக்கவர்களாக – சமுதாய உணர்ச்சியுள்ளவர்களாக எம் இளைஞர்கள் மாற வேண்டும். நாட்டிற்காக - சமூகத்திற்காக - மார்க்கத்திற்காக - நேர்மைக்காக எதையும் செய்யக் கூடியவர்களாக வீரம் திரம் மிக்கவர்களாகத் திகழ வேண்டும்.

யுத்தம் செய்யக் கூடியவர்கள் ஆண்கள் மாத்திரமல்ல. இத்தகுதி பெண்களுக்கும் உண்டு என்பதை முஸ்லிம் வீரப் பெண்மணிகள் நிரூபித்துள்ளதை இஸ்லாமிய வரலாற்றிலே பரக்கக் காணலாம்.

நாட்டிற்காகவும், சமூகத்திற்காகவும், மார்க்கத்திற்காகவும் போராடிய எத்தனையோ முஸ்லிம் பெண்போராளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை இஸ்லாமிய வரலாற்றிலே காண்கிறோம். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் யுத்தத்திற்குப் போகும் போது பெண்களையும் அழைத்துச் சென்றிருக்கின்றார்கள். ஒரு சமயம் 'உமையா பிந்த்கைஸ்' என்ற பெண்மணி யுத்தத்தில் காட்டிய தீரத்தைப் பாராட்டுமுகமாக ஒரு மாலையைக் கொடுத்துக் கௌரவித்திருக்கிறார்கள். 'யர்மூக்' யுத்தத்தின் போது அபூசுப்யானின் மனைவி 'ஹிந்தா' என்ற வீரமாதின் தலைமையின்கீழ் ஒரு பெண்படையே கலந்து கொண்டிருக்கிறது. யர்மூக்கில் நடந்த இன்னுமொரு யுத்தத்தில் 'உம்மு ஹக்கீம்' என்ற வீராங்கனை ஒரு சாதாரணக் கூடாரத்தடியொன்றினாலே ஏழு போர் வீரர்களைக் கொன்றதாக சரித்திரம் சான்று பகர்கிறது. ஹிஜ்ரி 14ல் 'காதஸ்ஸிய்யா' என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் முஸ்லிம் பெண் போராளிகள் பலர் பங்கெடுத்துக் கொண்டார்கள். இப் பெண்கள், போரில் இறந்தவர்களைப் புதைக்கக் குழி தோண்டுதல், காயமுற்றவர்களைத் தூக்கிவந்து சிகிச்சை செய்தல் போன்ற வேலைகளைச் செய்திருக்கின்றார்கள்.

ஒரு சமயம் டமஸ்கஸ் படையொன்றின் மத்தியில் முஸ்லிம் பெண்கள் வகையாக மாட்டிக் கொண்டபோது பக்கத்திலிருந்த கூடாரத்தடிகளை ஆயுதமாகப் பாவித்து எதிரிகளைத் தாக்கி அவர்களில் முப்பது வீரர்களைக் கொன்று குவித்த சம்பவத்தை பிரபல ஆங்கிலச் சரித்திராசிரியர் திரு. கிப்பன் வெகுவாகப் பாராட்டுகிறார். இச்சண்டையில் முஸ்லிம் பெண்களுக்குத் தலைமைதாங்கியவர் 'கௌலா' என்ற முஸ்லிம் பெண் போராளியே. இந்த முஸ்லிம் பெண்களின் வீரத்தையும், தீரத்தையும், கற்பொழுக்கத்தையும் இவ்வாசிரியர் வெகுவாகப் பாராட்டுவதோடு, 'இவர்கள் வில்லும், அம்பும் வைத்துப் போரிடும் திறம் படைத்தவர்களாகவும், சோதனையான சமயத்தில் தங்கள் கற்பையும், மார்க்கத்தையும் காப்பாற்றும் வலிமையுடையவர்களாகவும் விளங்கினார்கள்' என்று எழுதுகிறார்.

டமஸ்கஸ் முற்றுகையின்போது அபான் இப்னு ஸயீது என்ற முஸ்லிம் வீரர் 'தோமஸ்' என்ற எதிரியின் அம்புக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலியானதையறிந்த அவரின் மனைவி உம்மு அபான் என்ற வீரமாது பழிக்குப் பழி வாங்க உறுதி பூண்டார். கணவனை நல்லடக்கஞ் செய்துவிட்டு அவரின் ஆயுதங்களைத் தான் அணிந்து கொண்டு புறப்பட்டார். இம்மங்கையின் கண்கள் தோமஸைத் துருவித்துருவித் தேடின; தோமஸைக் கண்டன. அம்பு உடனே பறந்தது. அஃது அவனது கண் ஒன்றைக் குடைந்ததனால் அவன் துடிதுடித்துச் செத்த சம்பவத்தைச் சரித்திரம் மறக்க முடியாது.

முஸ்லிம் பெண்போராளிகளைப் பற்றிய இவைபோன்ற எத்தனையோ வீரதீரச் செயல்களை இஸ்லாமிய வரலாற்றிலே காணலாம். தேசப்பற்றால் - சமூகப் பற்றால் உந்தப்பட்ட முஸ்லிம் பெண் போராளிகள் அன்று மாத்திரமல்ல இன்றும் இருக்கிறார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இஸ்லாமிய வீராங்கனைகள் இருவர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பிரான்சிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அல்ஜீரியாவின் சுதந்திரத்திற்காக உழைத்த-ஒரு பெண்ணால் சகிக்க முடியாத துன்பங்களுக்குள்ளாக்கப்பட்ட அல்ஜீரியாவின் ஜமீலா பௌபாச்சா ஒருவர். தேசத்திற்காக - விடுதலைக்காகத் தன்னுயிரைத் துரும்பெனமதித்த வீரமங்கை அவர். பலஸ்தீன மக்களின்வி டுதலைக்காகப் போராடிய - போராடிக் கொண்டிருக்கும் 'லைலா காலித்' என்ற வீரமாது தான் அடுத்தவர். தன்னுயிரைத் துச்சமென மதித்து, துவக்கு முனையில் பறக்கும் விமானத்தைத் திசை திருப்பமுயன்ற வீரப் போராளி அவர். சந்தர்ப்பம் வரும்போது முஸ்லிம் பெண்கள் நாட்டிற்காக - சமூகத்திற்காக – மார்க்கத்திற்காக துப்பாக்கி பிடித்து எதிரிகளுடன் போராட வேண்டும் என்று வழிகாட்டிய வீரமங்கை லைலா காலித்! உலகத்தின் கவனத்தை ஈர்த்த – முஸ்லிம் உலகம் மறக்கமுடியாத இருவர் இவர்கள். இன்றும்கூட பலஸ்தீனத்தின் முஸ்லிம் பெண்கள் துவக்குப் பிடித்து எதிரிகளுடன் பலஸ்தீன விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருப்பதைக் காணுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இங்கு எமது முஸ்லிம் பெண்மணிகளில் 'ஜமீலாக்கள்' 'லைலா காலித்கள்' தோன்றுவிட்டாலும் அவர்களது சமூக, தேசிய உணர்ச்சிகளாவது இருக்கவேண்டும். எமது முஸ்லிம் சகோதரிகள் வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாக மாத்திரம் இருக்காமல் நாட்டிற்காக-சமூகத்திற்காக - மார்க்கத்திற்காக எதையும் செய்யக் கூடிய உணர்ச்சியுள்ளவர்களாக வாழ வேண்டும். மூடச் சம்பிரதாய பழக்க வழக்கங்களை உதறித் தள்ளிவிட்டு தமது பொறுப்பையுணர்ந்து "நாட்டுப் பற்று ஈமானின் ஒரு பகுதி" என்ற எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்மொழியைக் கருத்தில் கொண்டவர்களாக - சமூக உணர்ச்சி மிக்கவர்களாக - நாட்டின் நன்மையைக் கருதி நாட்டின் ஆக்கத்திற்கு உழைக்கும், உழைக்கும் மாதர்களாக மாறவேண்டியது அவர்களின் கடமை என்பதை அவர்கள் உணரவேண்டும்.

'இரண்டு கண்களை நரக நெருப்புத் தீண்டமாட்டாது. அவை (1) அல்லாஹ்வின் அச்சத்தின் காரணமாக அழுது கொண்டிருக்கும் கண்ணும், (2) இறைவழியில் விழித்திருந்து காவல் புரியும் கண்ணும் ஆகும்."

(அல்-ஹதீஸ்)

* * *

"எவர் இறைவழியில் போர் புரியச் செல்லும் தியாகிக்குத் தளபாடம், வாகனம் முதலியவற்றை அளிக்கின்றாரோ அவரும் நிச்சயமாகப் போர் செய்தவராவர். அன்றியும் எவர் இறைவழியில் போர் புரியச் சென்றவரின் குடும்பத்தினரை நல்ல விதமாகக் கவனித்து உதவி வருகின்றாரோ அவரும் நிச்சயமாகப் போர் செய்தவராவர்."

(அல்-ஹதீஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமத்துவம்: வரலாற்றில் சில நிகழ்ச்சிகள்:

கலீபா உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அவரால் எகிப்து நாட்டு அதிபதியாக நியமிக்கப்பட்டிருந்த அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்களின் மகன் முகம்மது என்ற இளைஞருக்கும் எகிப்து தேசத்தைச்சேர்ந்த கிறிஸ்தவ இளைஞர் ஒருவருக்கும், ஒரு குதிரைஓட்டப் போட்டியின்போது தகராறு ஏற்பட்டது. கையிலிருந்த கசையால் 'தான் அதிபதியின் மகன்' என்ற தைரியத்தில் அந்த ஏழைக் கிறிஸ்தவ இளைஞனை அடித்துவிட்டார். இதையறிந்த அம்ரிப்னு ஆஸ் (ரலி) அவர்கள், கலீபாவிடம் யாராவது முறையிட்டு விடுவார்களோ என்று பயந்து அவனை அடைத்துவிட்டார்கள். அவன் எப்படியோ தப்பி மதீனாவுக்குப்போய் உமர் (ரலி) அவர்களிடம் முறையிட்டான். உடனே, அம்ரிப்னு ஆஸ் (ரலி) அவர்களை மகனுடன் அவசரமாக வருமாறு உத்தரவு பிறப்பித்தார்கள். அவர்கள் வந்ததும் கலீபா அவர்கள் தம் கையிலிருந்த கசையை அந்தக் கிறிஸ்தவனிடம் கொடுத்து அந்த 'மேல்மகனின் மகனை அடிக்குமாறு பணித்தார்கள். அடிக்கு அடிகிடைத்தது' ''தன் தகப்பன் அதிபதி என்ற தைரியத்தில்தான் அவர் மகன் உன்னை அடித்துள்ளார். எனவே தகப்பனையும் அடி'' என்று கலீபா அவர்கள் பணித்தார்கள். அதற்கு அந்த எகிப்தியன் ''நான் என்னை அடித்தவனுக்கு அடித்துவிட்டேன்'' என்றான். ''நீர் அவரின் தகப்பனையும் அடித்தால், நாம் தடையிடப்போவதில்லை. உன் விருப்பத்தைப் பொறுத்தது'' என்றார்கள் கலீபா அவர்கள். உமர் (ரலி) அவர்கள், அம்ரிப்னு ஆஸ் (ரலி) அவர்களை நோக்கி ''ஏ அம்ரே! பெற்றோர் சுதந்திரர்களாகப் பெற்ற மக்களை நீர் எப்பொழுதுமுதல் அடிமைகளாக்கி அடக்கியாளத் துணிந்தீர்'' என்று குமுறினார்கள்.

× × ×

ஒரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னிலையில் அபூதர் (ரலி) அவர்களுக்கும் பிலால் (ரலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குமிடையில் பலத்த வாக்குவாதம் உண்டாகி விட்டது. ''நீர் ஒரு கருப்பியின் மகன் தானே'' என்று கூறி பிலாள் (ரலி) அவர்களின் மனதைப் புண்படுமாறு நிந்தித்துவிட்டார்கள். இதைக் கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ''ஏ! அபூதர்ரே! வாதம் வரம்பு மீறுகிறது. உமது கன்னத்தை நிலத்தில் வைத்து இங்கே பாரும். அறிந்து கொள்ளும் உழைப்பினாலன்றி, கறுப்பு, சிகப்பு, வெள்ளை போன்ற நிறங்களின் மூலம் ஒருவருக்குச் சிறப்புக்கிடையாது.'' என்று சுடச் சுடக் கூறினார்கள். உடனே, அபூதர் (ரலி) அவர்கள் ''நான் செய்த தவறுக்காக நீர் என்கன்னத்தில் அறையும்'' என்றார்கள்.

× × ×

ஒரு சமயம் கலீபா உமர் (ரலி) அவர்கள் மக்கா வினூடாகச் செல்லும் போது சில பணியாட்கள் தம் எஜமானர்களுடன் சாப்பிடாமல் நின்று கொண்டிருப்பதைக் கண்டார்கள். பொங்கி வந்தது கலீபரசருக்குக் கோபம். அந்த எஜமானர்களை நோக்கி ''உங்கள் பணியாட்களை விட நீங்கள் உயர்ந்தவர்கள் என்று ஏன் நினைக்கின்றீர்கள்?'' என்று கேட்டவண்ணம் அப்பணியாட்களை அழைத்து அவர்களுடன் ஒரே பாத்திரத்தில் சாப்பிடச் செய்தார்கள் புரட்சித் தலைவர் உமர் (ரலி) அவர்கள்.

× × ×

புனித கஃபாவை ஜபலா என்ற அரசர் வலம் வந்து கொண்டிருக்கையில், நெரிசலில் சாதாரண அரபி ஒருவரினால் அவரது அங்கி கிழிந்து விட்டது. அரசர் உடனே அவரது கன்னத்தில் அறைந்துவிட்டார். கலீபா உமர் (ரலி) அவர்களிடம் சென்று அந்த ஏழை அரபி முறையிட்டான். ''இது உண்மையா?'' என்று கலீபரசர் வினவ ஜபலா ''ஆம் உண்மை தான். இந்த அற்பன் எனது அங்கியை அல்லாஹ்வின் இல்லத்தில் வைத்து கிழித்துவிட்டான்.'' என்றார். ''வாதி மன்னிக்க வேண்டும். அல்லது அடிக்குப் பதிலடி அவன் கொடுக்க வேண்டும்.'' என்று தீர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கினர். ''நானே அரசன் அவனே ஒரு சாதாரண கமக்காரன்'' என்றார் இரசர், ''உண்மைதான் ஆனால், நீங்கள் இருவரும் அல்லாஹ்வின் முன்னிலையில் முஸ்லிம்களே.'' என்று உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

× × ×

பாத்திமா என்ற பெண், நகைகளைத் திருடிய குற்றத்திற்காகச் சலுகை காட்டுமாறு உஸாமா இப்னு ஸய்த் என்ற நபித் தோழர் அண்ணல் நபி (ஸல்) அவர்களை வேண்டினர் பெருமானாரவர்கள் அந்த நண்பரைப்பார்த்து ''இறைவன் விதித்த தண்டனையை நிறைவேற்றுவதில் நீர் சிபாரிசு செய்யத் துணிந்து விட்டீரா?'' என்று கேட்டு அவரை அனுப்பிவிட்டு அங்குள்ளவர்களைப்பார்த்து ''வலியவர் திருடினால் அவரை விட்டு விட்டு, எளியவர் திருடினால் அவரைத் தண்டிக்கும் பண்புதான் உங்களுக்கு முன்பிருந்த சமூகங்களை அழித்தது. இறைவன் மீது ஆணையிட்டுச் கூறுகிறேன். என் மகள் பாத்திமா திருடியிருந்தாலும் நிச்சயம் அவளுடைய கரத்தை வெட்டியே இருவேன்.'' என்றார்கள்.

× × ×

அபூஹுரைரு (ரலி) அவர்கள் பஹ்றைனுக்கு அதிபதியான பிறகு, ஏராளமாகப் பணஞ் சம்பாதித்து விட்டதாக கலீபா உமர் (ரலி) அவர்கள் அறிந்தார்கள், அவர்களின் சொத்தில் சந்தேகத்திற்குரியவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுமாறு உமர் (ரலி) அவர்கள் வேண்டினர்கள். ''இவை எனக்குச் சொந்தமானவை உம்மிடம் ஒப்படைக்க முடியாது'' என்று அபூஹுரைரு (ரலி) அவர்கள் பிடிவாதமாக மறுத்தார்கள்.

''நான் உம்மை பஹ்றைனுக்கு அதிபதியாக நியமித்த போது உம்மிடம் அணிந்து கொள்ள செருப்புக் கூட இருக்கவில்லை. இவ்வளவு தொகைப்பணம் நேர்மையான முறையில் உம்மிடம் வர நியாயமில்லை. இவை உமக்குத் தேவையுமில்லை. உமக்குப் போதிய பணத்தை அரசாங்கத்திடம் இருந்து பெற நாம் ஏற்பாடு செய்திருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நீர் இவற்றை ஒப்படைக்காவிட்டால் உமது முதுகை உரிப்பேன். எங்கே அப்பணம்?'' என்று கூறியவர்களாக தமது சாட்டையால் அபூ ஹீறைரு (ரலி) அவர்களை அடித்தார்கள். ''நான் அவற்றை தர்மஞ் செய்கிறேன்'' என்றூர்கள் அவர்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள் ''அதற்கு நீர் ஹலாலான முறையில் சம்பாதித்து தர்மங் கொடுத்திருக்க வேண்டும். பஹ்றைன் தேசத்திற்கு நாம் உம்மை அல்லாஹ்வின் பணியைச் செய்வதற்காகவன்றி, பணம் சம்பாதிக்க அனுப்பவில்லை.'' என்றூர்கள்.

× × ×

முஸ்லிமல்லாத அதிகாரிகளை பதவியில் இருந்து நீக்கி விடும்படி வந்த ஒரு விண்ணப்பத்திற்கு ''இந்த வித மூடச் செயலுக்கும், மார்க்கத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை,'' என்று அவ்ரங்கசீப் அவர்கள் பதிலளித்தார்கள்.

''உன்னுடைய மார்க்கம் உனக்கு எப்படியோ அதே போல் மற்றவர்களுடைய மார்க்கம் அவர்களுக்கு'' (109 : 6) என்று திருக்குர்ஆன் போதித்திருக்கின்றது. இஃது இப்படி யிருக்கும்போது இந்த விண்ணப்பத்தை அங்கீகரித்தால் பல அரசர்களையும் அவர்களது குடி மக்களையும் நாம் அழிக்க வல்லவா வேண்டும்.'' என்றூர் அவ்ரங்க சீப்.

× × ×

உமர் (ரலி) அவர்கள், கைப்பற்றப்பட்ட ஜெரூசலத்தை ஏற்க அரசாங்க அதிபரின் அழைப்பிற்கிணங்க அங்கு சென்றூர்கள். அவர் தங்க வேண்டிய அரண்மனையில் பல வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. அதில் தங்குவதற்கு கலீபா அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

''எனது சகோதரர்கள் தங்கும் இடத்தில் தங்குவதுதான் எனக்குப் பெருமை தரத்தக்கது.'' என்று கூறிவிட்டு சகோதரர்கள் தங்கியிருந்த முகாமிலே தங்கிவிட்டார்கள்.

× × ×



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம் உமர் (ரலி) அவர்கள் ஒரு கிழவர் இன்னொருவர் வீட்டில் பிச்சைக்காக நிற்பதைக் கண்டார்கள். அவரை விசாரித்த உமர் (ரலி) அவர்கள் அவர் ஒரு யூதன் என்பதைத் தெரிந்துகொண்டார்கள். "நீர் ஏன் பிச்சை வாங்குகிறீர்?" என்று கலீபா அவர்கள் வினவ அதற்கு அக் கிழவர் "நான் வயோதிபனாகவும் தேவையுள்ளவனாகவும் இருக்கிறேன்" என்றார். உடனே உமர் (ரலி) அவர்கள் அவரின் கையைப் பிடித்துக்கொண்டு அவர்களது வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள், பின் ஒருவரிடம் அவரை ஒப்படைத்து "இந்த வயோதிபனையும் அவரது தேவைகளையும் கவனித்துக்கொள். ஒருவரின் வாலிப காலத்தில் பிரயோசனத்தைப் பெற்றுக் கொண்டு, வயோதிபத்தில் கைவிடுவது நீதியாகாது. 'தேவையுள்ளவர்களுக்கும், ஏழைகளுக்கும்தான் தர்மம்' என்று குர் ஆன் போதிக்கின்றது. மக்களில் தேவையுள்ளவர்களில் இவரும் ஒருவர்" என்று கூறி அவரை அரசாங்கத்திரை சேரிக்கு அழைத்துச்செல்லுமாறு கட்டளையிட்டார்கள்.

× × ×

உமர் (ரலி) அவர்கள் ஒரு சமயம் சீரியாவுக்குச் சென்றுகொண்டிருக்கும்போது கிறிஸ்தவக் குஷ்டரோகிகள் கூட்டமொன்றைக் கண்டார்கள். இவர்களுக்கு அரசாங்க நிதியிலிருந்து உதவுமாறும், ஒவ்வொரு நோயாளிக்கும் அவரவர் தேவைகளைக் கவனிக்க ஒவ்வொரு பணியாளை நியமிக்குமாறும் ஆணை பிறப்பித்தார்கள்.

× × ×

ஒருமுறை ஹோம்ஸ் நகரிலிருந்து முஸ்லிமல்லாத ஒருவர், கலீபா உமர்பின் அப்துல் அஸீஸ் அவர்களிடம் வந்து "உண்மையின் ஆணையாளரே! அல்லாஹ்வின் திருமறையைக் கண்ணியப்படுத்துமாறு வேண்டுகிறேன்" என்றார். "உமக்கு என்ன வேண்டும்?" என்று கலீபா அவர்கள் வினவ "அல் அப்பாஸ் இப்னு அப்துல் மாலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் எனது காணியைப் பலவந்தமாகப் பெற்றுக் கொண்டார்கள்'' என்று அந்த முஸ்லிமல்லாதவர் கூறி நின்றார். அங்கு பிரசன்னமாகியிருந்த அல் அப்பாஸிடம் ''இதற்கு நீர் என்ன கூறுகிறீர்?'' என்று கலீபா அவர்கள் கேட்டார்கள். ''அல்வாலித் இப்னு அப்துல் மாலிக் என்பவர் அந்நிலத்தின் உறுதியுடன் deed தந்திருக்கின்றார்'' என்று அல் அப்பாஸ் கூறினார்கள். ''இதற்கு நீர் என்ன சொல்கிறீர்?'' என்று கலீபா அவர்கள் அந்த மனிதரை வினவ ''அல்லாஹ்வுடைய புனித திருமறையைக் கண்ணியப் படுத்துமாறு வேண்டுகிறேன்'' என்றார் திரும்பவும். அதற்குக் கலீபா அவர்கள் ''ஆம்! அல்லாஹ்வுடைய திருக்குர் ஆனை மதிப்பது, அல்வாலித் இப்னு அப்துல் மாலிக்குடைய உறுதிப்பத்திரத்தை deed மதிப்பதைவிட மேலானதாகும். ஏ! அப்பாஸ்! நிலத்தை அவருக்குத் திருப்பிக் கொடுத்து விடும்'' என்று கட்டளையிட்டார்கள். அப்பாஸ் அவர்கள் அப்படியே செய்தார்கள்.

× × ×

செய்ஹ் நிஜாமுத்தீன் என்ற ஒளலியாவுக்கு பல பரிசுகள் வந்தவண்ணமிருந்தன. அவர்கள் அதை வறியவர்களுக்கும் தேவைப்பட்டவர்களுக்கும் கொடுத்துதவி வந்தார்கள். அவர்களைக் காண வந்தவர்களுக்கு விருந்துச் சாப்பாடு வழங்கப்பட்டது. ஆனால், அவர்கள் எந்நாளும் நோன்பிருந்தார்கள். சாதாரண சாப்பாட்டையே சாப்பிட்டு வந்தார்கள். ''உங்களை இப்படியேயிருக்க விட மாட்டோம்'' என்று அவரின் சீடன் ஒருவன் சொன்னான்.

''பள்ளி வாசல்களிலும், வெளியிலும் அதிகமானவர்கள் பட்டினியாய் இருக்கும்பொழுது இந்தச் சாப்பாடு எப்படி என் தொண்டையினூடாகச் செல்லும்?'' என்று சீடனை நோக்கி அவர்கள் கேட்டார்கள்.

× × ×



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யஹ்யா இப்னு ஸாத் அவர்கள் கூறுகிறார்கள். ''நான் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களால் (ஸகாத்) தர்மப் பணம் வசூலிப்பதற்காக ஆபிரிக்காவுக்கு அனுப்பப் பட்டேன். ஸக்காத் வசூலித்ததன் பின் இப்பணத்தைக் கொடுப்பதற்காக ஏழைகளைத் தேடி அலைந்தோம். ஸக்காத்துப் பெற அருகதையுடைய ஒருவர் கூட அங்கு இருக்கவில்லை. உமர் அவர்களின் ஆட்சி மக்களை அப்படி வைத்திருந்தது. எனவே நான் அப்பணத்தின் மூலம் அடிமைகளை விடுதலை செய்தேன்.''

× × ×

கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் நண்பரான அன்பாஸா இப்னு அல் ஆஸ் என்பவர் அவரிடம் வந்தார்கள். சுலைமான் என்பவர் 20,000 தீனார்கள் தனக்குக் கொடுக்குமாறு கட்டளையிட்டுவிட்டு, அத்தொகை தனக்குக் கிடைக்கு முன்பே காலமாகி விட்டதால் திரும்பவும் கலீபா அவர்கள் பணிக்க வேண்டும் என்று நண்பர் என்ற முறையில் வேண்டினார். ''அத்தொகை எவ்வளவு?'' என்று உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் வினவ ''20,000 தீனார்கள்!'' என்றார்கள் அன்பாஸா அவர்கள்.

''இருபதினாயிரம் தீனார்களைக் கொண்டு நலாயிரம் குடும்பங்களுக்கு வாழ்வளிக்க முடியும். அத்தொகை முழுவதையும் ஒருவருக்கு நான் எப்படிக் கொடுப்பேன்? இறைவன் மீது ஆணையாக இதை நான் செய்யவே மாட்டேன்.'' என்றார்கள் கலீபா அவர்கள்.

---

''அண்ணல் நபி(ஸல்) அவர்கள் நாளைக்கென்று ஒன்றையும் சேகரித்து வைத்ததில்லை.''

அறிவிப்பவர் : அனஸ்(ரலி)

ஆதாரம் ; திர்மிதி.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் : சில தகவல்கள்.

## ஒளி வருடம் (*Light Year*) :

**ஒளி ஒரு விநாடிக்குச் செல்லும் தூரம் : 1,86,000 மைல்கள்.**

ஒளி ஒரு வருடத்திற்குச் செல்லும் தூரம் : 6,000,000,000,000 மைல்கள் (6 டிரிலியன் மைல்கள்).

## சூரியனிடமிருந்து கோள்களுக்குள்ள தூரம் :

| கோள் | தூரம் (மைல்கள்) | கோள் | தூரம் (மைல்கள்) |
|---|---|---|---|
| புதன் | 35,960,000 | சனி | 886,200,000 |
| வெள்ளி | 67,200,000 | யுரேனஸ் | 1,783,000,000 |
| பூமி | 92,900,000 | நெப்டியூன் | 2,794,000,000 |
| செவ்வாய் | 141,600,000 | புளூட்டோ | 3,670,000,000 |
| வியாழன் | 483,300,000 | | |

**சூரியனும் ஒரு விண்மீனே.**

**பூமியிலிருந்து சந்திரனுக்குள்ள தூரம் : 2,38,840 மைல்கள்.**

**பூமியிலிருந்து 'அல்பா செண்டூரி' (Alpha - Centauri) என்ற விண்மீன் கூட்டங்களுக்குள்ள தூரம் : $4\frac{1}{2}$ ஒளி வருடங்கள்.**

**பூமியிலிருந்து 'பால் வழி' (Milky Way) என்ற விண்மீன் கூட்டங்களுக்குள்ள தூரம் : 30,000 ஒளி வருடங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியிலிருந்து அண்டத் (Galaxy) திற்கு உள்ள தூரம்: 100,000 ஒளி வருடங்கள்.

('பேரண்டம்' (Universe) என்பது எண்ணற்ற அண்டங்கள் சேர்ந்ததாகும்.)

சூரியன் பூமியைப்போல் 10இலட்சம் மடங்கு பெரியது.

சூரியனின் மேற்பரப்பின் வெப்பம் : 11,000° ப.

பூமியின் மைய வெப்பம் : 5,000° ப.

பூமியின் விட்டம் (கிழக்கு மேற்காக) : 7,926.7 மைல்கள்.

பூமியின் விட்டம் (வடக்குத் தெற்காக) : 7,900 மைல்கள்.

சந்திரனின் விட்டம் : 2,160 மைல்கள்.

பூமியின் பரப்பு : 196,940,400 சதுர மைல்கள்.

பூமியின் பரப்பளவில் சந்திரனின் பரப்பளவு $\frac{1}{14}$ பங்கு.

சந்திரனைவிட பூமி 50 மடங்கு பெரியது.

பூமிக்கு மிக அண்மையிலுள்ள விண்மீனுக்குள்ள தூரம்: 26,000,000,000,000 மைல்கள்.

> "வானங்கள், பூமியின் படைப்பிலும், இரவு பகலின் மாற்றத்திலும், அறிவுடையோருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன" (3 : 190).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலை எழுதத் துணை புரிந்தவை :

1. அல் குர்ஆன்
2. அல் ஹதீஸ்
3. Muslim Socialism and the Western Theories of Socialism — by : ***M. I. Hazma.***
4. முஸ்லிம் பெண்கள் —
   ஆர். பி. எம். கனி B. A; B. L.
5. தித்திக்கும் திருமறை — அப்துல் வஹ்ஹாப்.
6. கருத்தடை இஸ்லாத்தின் தீர்ப்பு
   — மௌலானா மௌதூதி.
7. இஸ்லாம் தந்த மனித உரிமைகள்
   — றூஹுல் ஹக்.
8. இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவங்கள்
   — இலங்கை பைத்துல் மால் நிதி வெளியீடு.
9. ஜகாத் — மௌலானா மௌதூதி.
10. உழைப்பை உயர்த்தும் இஸ்லாம் — கட்டுரை மூலம்: மின்பருல் இஸ்லாம்;
    தமிழில்: M. I. M. வபா
    'தினகரன்' (22-8-74).
11. 'சனத்தொகைப் பிரச்சினை ஒரு நாட்டின் சமூகமைப்பைப் பொறுத்தது'
    — ஹூலிசங் - ஐ. நா. உரை -
    தினகரன் செய்தி (17-8-1974).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# CENTRAL CYCLE STORES

93, DAM STREET,

COLOMBO-12.

Phone : 32183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*For all your household requirements*

RADIOS, BICYCLES, & SPAREPARTS ;
COOKERS, OVENS, TOYS, CHINAWARE,
ELECTRICAL GOODS AND GIFT GOODS

*Try :*

**WELCOME STORES**

96, GALLE ROAD, MORATUWA.

---

For SHOES, TRIMMIGS & TEXTILES

*Visit :*

**Welcome Shoe Palace**

98, GALLE ROAD, MORATUWA.

---

FOR TAMIL, ENGLISH & SINHALA BOOKS

*Visit :*

**PERERA BOOK SHOP**

88, MAIN STREET, BERUWALA

---

*Visit :*

**MALLIKA'S**

39, MATUGAMA ROAD,
ALUTGAMA.

FOR ALL YOUR TEXTILE REQUIRMENTS.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிக்க. . . .

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 18 | லானங்கள் | வானங்கள் |
| 6 | 8 | 28 : 11 | 28 : 77 |
| 8 | 6 | வழியுறுத்த | வலியுறுத்த |
| 10 | 18 | இறங்காதவன் | இரங்காதவன் |
| 10 | 18 | இறங்க | இரங்க |
| 16 | 28 | உ | உர |
| 16 | 29 | அதள் | அதன் |
| 22 | 10 | இறைலனின் | இறைவனின் |
| 34 | 22 | அடிமையானதும் | அடிமையாவதும் |
| 38 | 4 | உள்ணவாறு | உள்ளவாறு |
| 39 | 11 | கூட்டுப் பிரதிநிதி | நாட்டுப் பிரதிநிதி |
| 47 | 22 | நிராயுதபாணி | நிராயுதபாணியாக |
| 47 | 25 | பின் | பின் |
| 45 | 18 | ஆசாரங்களையும் | ஆகாரங்களையும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்லாஹ்வின் திருநாமத்தால் . . .

"மேற்கிலோ, கிழக்கிலோ உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது(மட்டும்) நன்மை (செய்ததாக) ஆகிவிடமாட்டாது. எனினும் (உங்களில்) எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும், மலக்குகளையும், வேதத்தையும், நபிமார்களையும் மெய்யாகவே விசுவாசித்து பொருளை (அது எவ்வளவு விருப்புக்குரியதாயினும்) அவனுடைய விருப்பைப் பெறுதற்காகப் பந்துக்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் யாசகர்களுக்கும், விடுதலையை விரும்பியவர்களுக்கும் கொடுத்து, தொழுகையையும் கடைப்பிடித்து ஸகாத்துக் கொடுத்து வருகின்றாரோ அவரும், வாக்குறுதி செய்த சமயத்தில் தங்களுடைய வாக்குறுதியை (சரிவர) நிறைவேற்றுபவர்களும்; கஷ்டத்திலும், நஷ்டத்திலும், கடுமையான யுத்த நேரத்திலும் பொறுமையைக் கைக்கொண்டவர்களும் – ஆகிய இவர்கள்தாம் நல்லோர்கள் ; அன்றி இவர்கள் தாம் உண்மையானவர்கள் ; பயபக்தியுடையவர்கள்" (2 : 177).

— [அல்குர்ஆன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்களிடம் இரங்காதவன்மீது அல்லாஹ்வும் இரங்கமாட்டான்." (அல்ஹதீஸ்)

"நீங்கள் அநாதைகளைக் கண்ணியப்படுத்துவதில்லை. ஏழைகளுக்கு ஆகாரம் (நீங்கள் அளிக்காததுடன், மற்றவரையும்) அளிக்கும்படி தூண்டுவதுமில்லை. (பிறருடைய) அனந்தரப் பொருளையும் பேராசையுடன் (அபகரித்துத்) திரிகின்றீர்கள். நீங்கள் மிக்க அளவுகடந்து பொருளை நேசிக்கின்றீர்கள்"(89:17-20) அல்-குர்ஆன்

"நீங்கள் 'கப்ரு'களைச் சந்திக்கும் வரையில் (பொருளை) அதிகப்படுத்திக்கொள்ளும் பேராசை (அல்லாஹ்வை விட்டும்) உங்களைப் பராக்காக்கிவிட்டது" (102:1, 2)

— அல்-குர்ஆன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிக்கை

உழைப்போர் உலகம் - இஃது
இளைஞர் யுகம் - அதனுல்
வளரும் வாலிபருக்கு இஃது
என்னிதயக் காணிக்கை.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இறைவனிடத்தில் சிறந்தவர்கள் மனிதர்களுக்கு அதிக பயன் அளிப்பவர்களே. தனது ஆயுளில் அதிக பாவம் செய்தவனே மனிதர்களில் மிகக் கெட்டவன். தானே உண்பவனும், விருந்தினரை வெறுப்பவனும், வேலைக்காரனைத் துன்புறுத்துபவனும், பணக்காரனுக்குத் தலைசாய்ப்பவனும், ஏழையை இழிவாக மதிப்பவனும் இறைவனின் மிகுந்த கோபத்திற்குள்ளானவனாகும்." [அல் ஹதீஸ்]

◡ ◡ ◡

" அழகிய நடையொழுக்கங்களும், அழகிய சேவையுமே நல்லோருக்குரிய அடையாளங்களாகும் " [அல் ஹதீஸ்]

◡ ◡ ◡

" தயாள சிந்தையுடையவன் இறைவனுக்குச் சமீபத்திலிருக்கின்றான். அல்லாஹ்வின் அருளுக்கு அண்மித்தும், தண்டனைக்குத் தூரமாகியும் இருக்கின்றான். உலோபியானவன் அல்லாஹ்வின் தண்டனைக்கு அண்மித்தும் அவனின் அருளுக்கு மிகத் தூரமாகியும் இருக்கின்றான். " [அல் ஹதீஸ்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குர்ஆனிலிருந்து.........

"(வழிகெட்டவர்களே!) நாமே உங்களை (முதன் முறையாக)ப் படைத்திருக்கின்றோம். (ஆகவே மறுமுறை உங்களை உயிர்ப்பிப்பதை) நீங்கள் உண்மையென நம்ப வேண்டாமா?" (56:57)

"நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா? அதனை(ச்சிசுவாக) நீங்கள் படைக்கின்றீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா?" (56:58,59)

"(நீங்கள் பூமியில்) பயிரிடுவதைக் கவனித்தீர்களா? அதனை நீங்கள் (முளைப்பித்துப்) பயிராக்குகின்றீர்களா அல்லது நாம்தாம் பயிராக்குகின்றோமா? (56:63,64)

"நீங்கள் குடிக்கின்ற நீரைக் கவனித்தீர்களா? மேகத்திலிருந்து நீங்கள் அதனைப்பொழிவிக்கின்றீர்களா? அல்லது நாம் பொழிவிக்கின்றோமா? நாம் விரும்பினால் அதனை (நீங்கள் குடிக்கமுடியாத) உப்பு நீராக்கிவிட்டிருப்போம். (இதற்கு)நீங்கள் நன்றிசெலுத்தவேண்டாமா?"(56:68-70)

"நீங்கள் (அடுப்பில்) மூட்டுகின்ற நெருப்பைக் கவனித்தீர்களா? அதன் மரத்தை நீங்கள் உற்பத்தி செய்கின்றீர்களா? அல்லது நாம் உற்பத்திசெய்கின்றோமா? (நரகத்தின் நெருப்பை உங்களுக்கு) ஞாபகமூட்டும்பொருட்டும், வழிப்போக்கருக்குப் பயனளிக்கும்பொருட்டும் அதனை நாம்தாம் ஆக்கினோம்" (56:71-73)

"(உங்களில் மரிக்கும் ஒருவரின் உயிர்) தொண்டைக் குழியை அடைந்தால் அந்நேரத்தில் நீங்கள் (இறப்பவனுக்குச் சமீபமாயிருந்தும், ஒன்றும் செய்யமுடியாமல்) பறக்கப் பறக்க விழிக்கின்றீர்கள். ஆயினும் நாம் அவனுக்கு உங்களைவிட மிக்க சமீபமாக இருக்கின்றோம்; எனினும், நீங்கள் (நம்மைப்) பார்ப்பதில்லை. நீங்கள் எவருக்குமே இக்கியப்படாமல் (பூரண சுதந்தி முடையவர்களாக) இருந்து, மெய்யாகவே நீங்கள் (இதில்) உண்மையானவர்களாயிருந்தால், அதை (இறந்த அவனுடைய உயிரை) நீங்கள் மீள வைப்பதுதானே! (இறந்தவர் பரிசுத்தவானாகயிருந்து, இறைவனுக்கு) நெருங்கியவர்களில் உள்ளவராக அவர் இருந்தால், அவருக்குச் சௌக்கியமும், திருப்தியும் உண்டு; இன்பமளிக்கும் சுவனபதியுமுண்டு". (56:83-89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org